வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 01 21.07.2021 புதன்கிழமை இதழ் : 230 பக்கங்கள் : 16

# தப்பினார் அமைச்சர் உதய கம்மன்பில!

## மண் கவ்வியது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஜூலை 21

எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பு தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 91 மேலதிக வாக்குகளினால் அரச தரப்பினால் தோற்கடிக்கப்பட்டது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் எதிராக 152 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையிலேயே எதிர்க்கட்சியின் பிரேரணை படுதோல்வியடைந்தது.

பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்காரினால் முன்வைக்கப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அதே கட்சியை 15




# நான்காவது அலையின் ஆரம்பத்தில் இலங்கை!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

கொரோனா வைரஸின் நான்காவது அலையின் ஆரம்பத்தை இலங்கை நெருங்கியுள்ளதாக இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அந்தச் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன இதனை தெரிவித்தார். 15

# மேலும் 43 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 21

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான மேலும் 43 பேர் இலங்கையில் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புக்கள் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரை கொரோனாவல் உயிரிழந்துள்ளவர்கள் எண்ணிக்கை 3, 870 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசும் எதிரணியும் கின்னஸ் சாதனை

## சபையில் ரணில் விளாசல்

கொழும்பு, ஜூலை 21

ஆட்சிக்கு வந்து 10 மாதங்களுக்குள் நாட்டைச் சிக்கலுக்குள் தள்ளியுள்ள அரசு கின்னஸ் சாதனைக்குள் உள்வாங்கப்பட வேண்டியதே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. தெரிவித்தார்.

அதேபோன்று இவ்வாறான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர முடியாது இருக்கும் 15

# நேற்று 1,511 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,511 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 15



# வடக்கு பிரதம செயலாளராக வவுனியா அரச அதிபர் சமன்

கொழும்பு, ஜூலை 21

வவுனியா மாவட்ட செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, வடக்கு மாகாண பிரதம செயலாளராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பிரதமர் செயலாளர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையில் மூத்த அதிகாரிகளில் ஒருவரை நியமிக்க 15

# அதிகரித்த விலைக்கு அரிசி விற்றால் ரூ.100,000 தண்டம்!

## சட்டத்தைத் திருத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 21

அதிக விலைக்கு அரிசி விற்கும் வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் தண்டப் பணத்தை ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்தும் சட்ட வரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அவசரத் தேவையாக சட்டவரைவை பாராளுமன்றில் முன்வைத்து தற் 15



# அமைச்சர் கம்மன்பிலவுக்கு கைகொடுத்த அரவிந்தகுமார்

## பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 21

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக அரவிந்தகுமார் எம்.பி. நேற்று வாக்களித்தார்.

அரசமைப்பின் 15

# மக்களைப்பற்றி சிந்திக்காத அரசு

## கஜேந்திரன் எம்.பி. விசனம்

கொழும்பு, ஜூலை 21

மக்களைப்பற்றி சிந்திக்க தற்போதைய அரசாங்கத்திற்கு தெரியாது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார். அவரே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளியான பரபரப்பான செய்தி இது.

ஏற்கனவே ஒருதடவை நமது ஊடகவியலாளர்கள் பற்றி எழுதியது இப்போதும் ஞாபகத்திற்கு வருகின்றது.

நான்கு பேர் இருந்து கதைத்துக்கொண்டிருந்த போது தண்ணீர் தாகமெடுத்தது. மேசையில் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து இந்த ஊர்க்குருவி மடக்... மடக் கென்று அரைவாசியைக் குடித்துவிட்டு வைத்துவிட்டார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த நமது ஊடகவியலாளர் அதனைச் செய்தியாக எழுதுவதெனில், ஊர்க்குருவி அரைப்போத்தல் தண்ணீரைக் குடித்துவிட்டார் என்றுதான் எழுதுவார்கள்.

ஊர்க்குருவி மற்றவர்கள் குடிக்க அரைப்போத்தல் தண்ணீரை விட்டுவைத்தார் என்று எழுதமாட்டார்கள். இதுதான் நமது ஊடகவியல் என்பதை முன்னர் ஒரு தடவையும் குறிப்பிட்டிருந்தோம்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் சில தெரிவுசெய்த ஊடகங்களின் உரிமையாளர்களை அல்லது அதன் தலை வர்களை சந்தித்திருந்தார்.

குறிப்பிட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் மாத்திரமே அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனராம்.

தமிழ் ஊடகங்களிலிருந்து கலந்துகொண்டவர்கள்டான் - ஈழநாடு குழுமத் தலைவர் குகநாதனும், வீரகேசரி பத்திரிகை நிறைவேற்று அதிகாரி செந்திலும்தான்.

கூட்டத்தில் என்ன நடந்தது என்பதை அறிய எமது நிறுவனத் தலைவரிடம் பேசினோம். அவர் சொன்ன தகவல்களை கீழே தருகின்றோம்.

ஜனாதிபதி தான் நாட்டில் முன்னெடுக்கும் மூன்று முக்கிய விடயங்கள் குறித்து விபரமாக விளக்கமளித்தாராம்.

கொரோனா தடுப்பூசி வழங்குவதில் நாடு அடைந்து வரும் முன்னேற்றம். இரசாயன உரத்தை தடைசெய்து விட்டு சேதன பசளையை நாட்டில் அமுல்படுத்துவதற்கு தான் எடுத்துவரும் நடவடிக்கைகள். மின்சார உற்பத்தியில் காற்றலை, சூரிய சக்தி மின் உற்பத்தியில் அடைந்துவரும் முன்னேற்றம் ஆகிய மூன்று விடயங்கள் குறித்தும் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக விளக்கமளித்த ஜனாதி பதி, இந்த விடயங்களை மக்களுக்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ஊடகங்கள் உதவவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தாராம்.

பின்னர் சந்திப்பில் கலந்துகொண்டவர்களின் கருத்துக் களைக் கேட்டிருக்கிறார். அப்போது, ரூபவாகினி தலை வரும் முன்னாள் வட மாகாண ஆளுநருமான றெஜி னோல்ட் கூரே, சில யோசனைகளைச் சொன்னவர், இவற்றை வேகமாகச் செய்யவேண்டும் என்றும் எஞ்சியிருக் கின்ற மூன்று ஆண்டுகளில் செய்து முடிக்கவேண்டும் என்றும் சொன்னபோது, குறுக்கிட்ட ஜனாதிபதி சிரித்துக்கொண்டே அதற்குப் பின்னரும் ஐந்து வருடம் இருக்கிறதுதானே என்றார்.

அது அவரின் உத்தியோகபூர்வ அறிவிப்பு என்பதல்ல. அவர் நகைச்சுவையாக சொன்னது. ஆனால், அதுவும் அவரின் எண்ணக்கிடக்கைதான்.

இதுதான் அங்கு நடந்தது என்றார் எமது நிறுவனத் தலைவர் குகநாதன்.

இந்தச் செய்தியை உடன் தந்த அந்த ஊடகத்திற்கு அவர் அடுத்த தடவையும் தேர்தலில் போட்டியிட வேண் டும் என்ற ஆசை இருக்கலாம். அதனால்கூட அப்படி ஒரு செய்தியை 'பிறேக்கிங்' நியூசாகத் தந்திருக்கலாம்.

செய்தி என்பது இப்படித்தான். அதனைத் தருகின்ற ஊடகங்களின் விருப்பு வெறுப்பில்தான் தங்கியிருக்கின்றது.

மேலே குறிப்பிட்டது போல, ஊர்க்குருவி அரைப்போத்தல் தண்ணீரைக் குடித்துவிட்டார் என்பதும் அரைப்போத்தல் தண்ணீரை மற்றவர்களுக்காக விட்டு வைத்திருக்கிறார் என்பதும் ஒன்று தானே.

அதுபோலத்தான் இந்தச் செய்தியும்.

**- ஊர்க்குருவி**

# சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்தால் மட்டுமே பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்

*அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 21

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாணவர்களுக்கு தடுப்பூசியை செலுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லாத நிலையில் பரீட்சையை நடத்துவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி முழுவதுமாக செலுத்தப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் பாடசாலைகளை மீண்டும் திறக்க திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை நிலவரப்படி நாடளாவிய ரீதியில் 46,603 ஆசிரியர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

### கல்வி TV CHANNEL-1 — 21.07.2021 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி TV CHANNEL - 2 — 21.07.2021 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## பாடத்திட்டங்களை முடிக்காமல் பரீட்சையா?

கொழும்பு, ஜூலை 21

முழுமையான பாடத்திட்டங்கள் நிறைவடையாத நிலையிலும் ஒன்லைன் கற்றலில் சிக்கல்கள் காணப்படும் சூழலிலும் பரீட்சை குறித்து ஒரு முடிவை எவ்வாறு எட்டினீர்கள் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்டங்களை சில மாதங்களுக்குள் முடிக்க முடியுமா என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

பாடத்திட்டங்களை முடித்த பின்னர் பரீட்சைகள் குறித்து முடிவு எட்டுவதே புத்திசாலித்தனமானது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தடுப்பூசியை மாணவர்களுக்கு வழங்குவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லாத நிலையில் பரீட்சைக்கு செல்லும் மாணவர்களின் பாதுகாப்பிற்கு என்ன உத்தரவாதம் என்றும் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

## மன்னாரில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'பைஸர்'

மன்னார், ஜூலை 21

மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி பயிலுநர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஆகியவை இணைந்து இந்த தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

மன்னார் பல்கலைக்கழக மாணவர்கள் ,கல்வியியல் கல் லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்ப கல்லூரி மாண வர்களுக்கு விசேடமாக பைஸர் தடுப்பூசிகள் செலுத்தப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

Eelanadu
ஈழநாடு
21.07.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# பிரசங்கங்கள் ஏராளம் ஆனால்!

தமிழ் அரசியலில் அதிகமான அரசியல் பிரசங்கங்களை காண முடிகின்றது. பட்டிமன்றம் ஒன்றை பார்க்கும் பார்வையாளர் ஒருவர், ஆகா - அற்புதம் - அருமை என்று, கூறிவிட்டு தங்களின் வேலைகளை பார்க்கச் சென்றுவிடுவது போன்றே, தமிழ் மக்களும் காணப்படுகின்றனர். கொரோனா தொற்று தமிழ் அரசியலை அதிகம் இணையத்தளங்களுக்குள் முடக்கியிருக்கின்றது.

பெருந் தொற்று காலத்திற்கு முன்னர் அவ்வப்போது சில சந்திப்புக்களும், உரையாடல்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஆனால், இவ்வாறான சந்திப்புக்கள் அனைத்தும் சூம் உரையாடல்களாகவும் யூ-டியுப் ஆய்வுகளாகவும் உருமாறிவிட்டன. ஒப்பீட்டடிப்படையில் இது மிகவும் இலகுவானதாகவும் பொறுப்புச் சொல்ல வேண்டிய அவசியமற்ற முறையாகவும் இருக்கின்றது. ஒரு கமெராவும் கொஞ்சம் இணைய அறிவும் இருந்தால் போதும் ஏதோவொரு மூலையில், இருந்தவாறு தங்களின் கருத்துக்களை சொல்லிவிட்டு போகலாம். உண்மையில் ஓரளவு உயிர்ப்புடன் இருந்த தமிழ் அரசியல் உரையாடல்களையும் கொரோனா விழுங்கிவிட்டது.

புலம்பெயர் சூழலில் வாரத்திற்கு ஆகக் குறைந்தது நான்கு சூம் சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன. போதாக் குறைக்கு ‘கிளப்ஹவுஸ்’ என்னும் புதிய செயலியின் மூலம் தினமும் சிலர் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர். ஆனால், தமிழ் அரசியல் சூழலோ முன்னரை போன்று அப்படியே அரக்காமல் இருக்கின்றது. வட, கிழக்கின் அரசியல் நிலைமையோ மேலும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. சீனா - இந்தியா - அமெரிக்கா என்னும் சொற்களை வைத்துக் கொண்டு ஆய்வுகள் என்னும் பெயரில் தமிழ் மக்கள் மததியில் மேலும் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், பாகிஸ்தான் உளவுத்துறை வடக்கிற்குள் வந்திருப்பதாக கூறியிருந்தார். உளவுத் துறைகள் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துவிட்டா செயல்படும்? மேலும், உளவுத்துறை செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்கு தமிழ் அரசியல்வாதிகளிடம் பிரத்தியேக உளவு அமைப்புக்களா இருக்கின்றன?

உண்மையில் இவ்வாறான பேச்சுக்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் தடுமாற்றத்தையுமே ஏற்படுத்துகின்றன. ஒரு வேளை இவ்வாறான வாதங்களை பொது வெளியில் முன்வைப்பவர்களின் நோக்கமும் அதுவாகவே இருக்கலாம். தமிழ் மக்கள் குழம்புவதும், தமிழ் மக்கள் குழப்பப்படுவதும் யாருக்கு நன்மையானது?

உண்மையில் இன்றைய நிலையில் தமிழ் அரசியல் தலைவர்கள் என்போரும் சரி, தமிழ் அரசியலை வழிநடத்தும் ஆற்றல் தமக்கிருப்பதாக எண்ணிக் கொள்ளும் ஆய்வாளர்கள், அறிஞர்கள் என்போரும் சரி, எதை நோக்கி போக வேண்டும் - எதை நோக்கி சென்றால் தமிழர் தாயகத்தில் வாழும் மக்களை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பதை சொல்லும் நிலையில் இல்லை. அரசியல்வாதிகள் தங்களுக்கு அனைத்தும் தெரியும் என்று எண்ணுவது போன்றே, (சிலர்) ஆய்வாளர்கள் என்போரும் தங்களை சகலகலா வல்லவர்களாகவே கற்பிதம் செய்து கொள்ளும் நிலைமைதான் காணப்படுகின்றது. இதனால் அரசியல் பிரசங்கங்கள்தான் அதிகரித்துச் செல்கின்றனவே தவிர, தமிழ் சூழலில் ஆக்கபூர்வமாக எதுவும் இடம்பெறவில்லை.

அமெரிக்கா, சீனா, இந்தியா - இந்த பெயர்களை முன்வைத்து, ஏராளமான கற்பனைகள் உலவுகின்றன. அண்மையில் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவிற்கு கொடுத்துவிட்டதாகவும் ஒரு கதை புனையப்பட்டது. இவ்வாறான கதைகளை புனைபவர்களுக்கு பின்னால் காரணங்களும், ஆட்களும் இருக்கலாம். ஆனால், இவைகளை உள்வாங்கி சிந்திக்க முற்படுவர்கள் தொடர்பில்தான் தமிழ் சமூகம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனெனில், இவ்வாறானவர்கள் சிங்கள அடிப்படைவாதிகளை விடவும் ஆபத்தானவர்கள்.

# மனிதாபிமானத்துக்கு சவால் விடும் மலையக சிறுமியின் மரணம்!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கையர்கள் அனைவரதும் கவனத்தை ஈர்த்த ஒரு கொடூர சம்பவமாகவே முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைபார்த்த மலையக சிறுமி ஹிஷாலினியின் மரணம் விளங்குகின்றது.*

*ஹற்றன் டயகம பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதான ஹிஷாலினி கடந்த 3ஆம் திகதி தீக்காயங்களுடன் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.*

*ஹற்றன் டயகம பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவரான ஹிஷாலினி வீட்டுப்பணிப்பெண்ணாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் இருந்துள்ளார். கொழும்பில் பிரபலமானவர்கள் வதிகின்ற கொழும்பு-7 பௌத்தாலோக மாவத்தையில் ரிஷாத் பதியுதீனின் இல்லம் அமைந்துள்ளது.*

*சிறுவர், சிறுமியர்களை வேலைக்கமர்த்துவதற்கான வயதெல்லைச் சட்டத்தையும் மீறிய நிலையில் 15 வயதில் சிறுமி ஹிஷாலினி ரிஷாத் பதியதீனின் இல்லத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்.*

**மர்ம மரணம்**

*இந்நிலையில் அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட நிலையில் மரணத்தை தழுவியிருக்கலாம் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகள் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டுள்ளன. எனவே கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்திலேயே தற்போது விரிவான விசாரணைகள் குற்றப்புலனாய்வு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*இறந்த சிறுமி ஹிஷாலினியின் பிரேத பரிசோதனை அறிக்கையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு அப்பெண் பல தடவைகள் உள்ளாகியுள்ளாரெனவும். அவரின் அந்தரங்க உறுப்பு மிகவும் சேதப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதுதவிர, கடந்த பல மாதங்களாக சிறுமி ஹிஷாலினி அவரது வீட்டுக்கு போக ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்காரர்களால் அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மாதாந்த சம்பளமாக இருபதினாயிரம் ரூபாயில் ஹிஷாலினி வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.*

*இதேவேளை, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்காரர்களிடம் புலனாய்வுப்பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இலங்கையில் தோட்டத்தொழிலாளர்கள் குடும்பங்களை சேர்ந்த சிறுவர், சிறுமியர்கள் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படுவது பன்னெடுங்காலமாகவே இடம்பெற்று வருகின்றது. இத்தகைய வேலைக்கமர்த்தும் சிறுவர், சிறுமியர்கள் பெரும்பாலும் ஓர் அடிமை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர்.*

*முன்புகூட வேலைக்கமர்த்தப்பட்ட மலையகப்பகுதியை சேர்ந்த சிறுவர், சிறுமியர்கள் துன்புறுத்தல்களுக்குள்ளான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாகவே சிறுவர், சிறுமியர் களை வேலைக்கமர்த்துவது தொடர்பாக வயதெல்லைகள்கூட நிர்ணயிக்கப்பட்டிருந்தன.*

**தாழ்வான வாழ்க்கை தரம்**

*இருந்தபோதிலும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்வான நிலையிலிருப்பதன் காரணமாக வறுமையைப்போக்க பாடசாலைக் கல்வியைக்கூட புறந்தள்ளிய நிலையில் மலையக சிறுவர் , சிறுமியர்கள் வசதிபடைத்தோரின் வீடுகளுக்கு வீட்டு வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.*

*பெருந்தோட்டச்செய்கைக்காக ஆங்கிலேயரால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய சந்ததியினரில் பலர் கல்வித்துறையில் நாட்டம் கொண்டவர்களாகவும் படித்துப்பட்டம் பெற்றவர்களாக சகல துறைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தாம் சார்ந்த துறைகளில் உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.*

*ஆயினும் பெரும்பாலானவர்கள் இன்றுங்கூட தமது நாளாந்த வாழ்க்கைக்காக பெரும் பேராட்டத்தையே நடத்திவருவதை அவதானிக்க முடிகின்றது.*

*இவ்வாறு வறுமைக்கோட்டிற்கு கீழே வாழுகின்ற மலையக மக்களின் குடும்பங்களை சேர்ந்தவர்களே வீட்டு வேலையாட்களாக பணிபுரிவதுடன் துன்புறுத்தல்களுக்குமுள்ளாகி வருகின்றனர்.*

*மர்மமான முறையில் இறந்துள்ள ஹிஷாலினியின் மரணம் தமது வறுமையைப்போக்க வேலைபெற்ற ஓர் அப்பாவி மலையக சிறுமி எவ்வளவு தூரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள், அம்மக்களின் வறுமை நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அந்த மக்களை எவ்வளவு தூரம் புறந்தள்ளுகின்றார்கள் என்பதையும் ஹிஷாலினியின் மரணம் எடுத்துக்காட்டுகின்றது.*

*மலையக சிறுவர் , சிறுமியர்களை வேலைக்கமர்த்தும் நடவடிக்கைகள் நன்கு திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்படுவதுடன் இடைத்தரகர்களும் இதுவிடயத்தில் செயல்பட்டு வருகின்றனர்.*

*எனவே, தனது வயிற்றுப்பிழைப்புக்காக பல கனவுகளுடன் ஒரு முக்கியஸ்தருடைய வீட்டில் வேலைக்கமர்ந்துள்ளதாக கருதியிருந்த மலையக சிறுமி ஹிஷாலினி மர்மமான முறையில் உயிரிழந்தார்.*

*இந்த மர்ம மரணம் எவ்வித ஒளிவு மறைவுமின்றி உரிய முறையில் துப்புத்துலக்கப்பட்டு ஹிஷாலினியன் ஆத்மா சாந்தியடையும் வகையில் நீதி கிடைக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுலை - 21 புதன்கிழமை
பிலவ வருடம் - ஆடி 05
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
உறவினருடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவும். செலவு கூடும். வீடு,மனை வாங்கக்கூடிய யோகம் உண்டு. உடல்நிலை சீராகும்.

**இடபம்**
பொருளாதார முன்னேற்றம் இருக்கும். முயற்சி வெற்றி பெறும். நினைத்த விஷயம் கைகூடி மகிழ்ச்சி அளிக்கும். ஆடம்பர எண்ணம் வரும். பொன் பொருள் சேரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**மிதுனம்**
கொடுக்கல், வாங்கலில் அனுகூலமானப் பலன் உண்டாகும். வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். பெரிய மனிதரின் உதவி கிடைக்கும். தொழிலில் முதலீட்டை அதிகப்படுத்தி லாபம் அடைவீர்கள்.

**கடகம்**
வழக்கின் தீர்ப்பு சாதகமான திசையில் செல்லும். பொறுமை தேவை. கடன் பிரச்னை குறையும். நவீன உத்திமூலம் நன்மை காண்பீர்கள். தடைப்பட்ட பதவி, ஊதிய உயர்வு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்**
பணியைச் சிறப்பாக முடித்து அதிகாரியின் பாராட்டுப் பெறுவீர்கள். வெளியூர் சென்று பணிபுரிய விரும்புபவர்களின் விருப்பம் நிறைவேறும். புதிய வேலை தேடுபவர்கள் சிறப்பான வேலை வாய்ப்புப் பெறுவர்.

**கன்னி**
சக ஊழியர் ஒத்துழைப்பால் வேலைப்பளு குறையும். தடைப்பட்ட நல்ல விஷயம் நிறைவேறத் துவங்கும். புத்திர பாக்கியம் அமையும். குழந்தைகள் மகிழ்விப்பார்கள்.

**துலாம்**
மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவம் நடக்கும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். பொருளாதார நிலை முன்பைவிட பன்மடங்கு உயரும். சேமிக்கலாம். தகவல் ஒன்றால் எதிர்பாராத சந்தோஷம் உண்டாகும்.

**விருட்சிகம்**
ஆரோக்கியம் சிறப்பாக அமையும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பணி புரியும் பெண்களுக்கு உயர்பதவி கிடைக்கும். அந்தஸ்து உயரும். பெயர், புகழ், பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

**தனுசு**
நல்ல குணுணத்தால் பணத்திறகு சிரமப்பட்டாலும் முடிவு நன்மையே.மறைமுக வருமானம் பெருகும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். எடுக்கும் முயற்சி வெற்றி. ஆதரவைப் பெறுவர்.

**மகரம்**
உங்கள் பேச்சால் சிலருக்கு நன்மை உண்டாகலாம். செல்வாக்கு ஏற்படும். தேவைக்கேற்ப வருமானம் சிறப்பா இருக்கும். உடனிருப்பவர்களின் மூலம் சாதமான பலன் உண்டாகும்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கைகூடி மகிழ்ச்சியளிக்கும். சொத்துகளால் பராமரிப்புச் செலவு உண்டாகும். மகிழ்ச்சி உண்டு. சொத்து வாங்கும் வாய்ப்பு கிடைத்தால் யோசித்து முடிவெடுங்கள்.

**மீனம்**
புதிய வாய்ப்பு தேடி வரும். தடைப்பட்ட பணவரவு வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். வெளியூர் செல்ல வாய்ப்பு வரும். வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பெரிய மனிதர்களின் நட்பு கிட்டும்.

# அ.தி.மு.க கொடியுடன் வந்த சசிகலா அவசரமாகக் கிளம்பிய எடப்பாடி

## அப்பலோவில் 15 நிமிடங்களுக்கு நீடித்த பரபரப்பு

சென்னை, ஜுலை 21

உடல்நிலை மோசமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும்அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனனை காண எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியும், சசிகலாவும் ஒரே நேரத்தில் மருத்துவமனைக்கு வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

80 வயதான அதிமுக அவைத் தலைவர் மதுசூதனன் மூச்சுத் திணறல் காரணமாக நேற்று முன் தினம் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கும் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அவரது உடல்நிலை குறித்து விசாரிக்க எதிர்க்கட்சித் தலைவரான எடப்பாடி பழனிச்சாமி நேற்று நண்பகல் சுமார் 12 மணி அளவில் அவர் அப்போலோ மருத்துவமனை வந்தடைந்தார்.

எடப்பாடி பழனிச்சாமி மருத்துவமனைக்கு சென்ற ஐந்து நிமிடங்களில் மதுசூதனனை காண சசிகலாவும் அப்போலோ மருத்துவமனை வந்தடைந்தார். இதன் காரணமாக இரு தரப்பினரும் பரபரப்படைந்தனர். சசிகலாவின் காரில் அதிமுக கொடியும் இடம் பெற்றிருந்தது. இருவரும் நேர் எதிரே சந்தித்துக் கொண்டால் என்ன ஆகும் என்ற எதிர்பார்ப்பு அனைவரின் மனதிலும் தொற்றிக் கொண்டது.

சசிகலாவின் கார் அப்போலோ மருத்துவமனையின் நுழைவுவாயிலில் வரிசையில் காத்திருக்க, வேகமாக எடப்பாடி பழனிச்சாமி



மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். நுழைவு வாயிலும் வெளியேறும் வாயிலும் வேறுவேறு என்பதால் இருவரும் எதிர் எதிர் பார்த்துக் கொள்ளவே இல்லை. பழனிச்சாமி வெளியேறிய பின்னர் சசிகலாவின் கார் மருத்துவமனை வாயிலுக்குள் நுழைந்தது. இதனால், சுமார் 15 நிமிடங்கள் நீடித்த பரபரப்பு இறுதியில்சத்தமில்லாமல்முடிந்து போனது.

# தமிழ்மொழிக்கு அதிக நிதி ஒதுக்கி தனி அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும்

## கமல்ஹாசன் வலியுறுத்தல்



சென்னை, ஜுலை 21

தமிழ் வளர்ச்சிக்கென அதிக அளவில் நிதி ஒதுக்கி, பணியாற்ற வேண்டியதும் நம்முடைய வரலாற்றுக் கடமை என்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழிக்கென தனி அமைச்சகமும், தமிழ் வளர்ச்சிக்கு அதிகளவில் நிதி ஒதுக்கி தீவிரமாகப் பணியாற்ற வேண்டியதும் நம்முடைய வரலாற்றுக் கடமை என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடுமையான முயற்சிகளுக்குப் பின் 2004ஆம் ஆண்டு செம்மொழி எனும் அங்கீகாரத்தைப் பெற்றது தமிழ் மொழி. பரிதிமாற் கலைஞர் போன்ற தமிழறிஞர்கள் தொடங்கிய இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றியை ஈட்டித் தந்தவர் கருணாநிதி. செம்மொழியான தருணத்தை அனைவருமே கொண்டாடி மகிழ்ந்தோம்.

செம்மொழி அறிவிப்பு வந்து 17 ஆண்டுகளாகிவிட்டன. மொழி வளர்ச்சிக்கென நாம் என்னவெல்லாம் செய்திருக்கிறோம் என, கறாராகத் தொகுத்துப் பார்த்தால், பெரிதாக ஒன்றும் இல்லை. ஒரு வழக்கில் தமிழ்மொழி வளர்ச்சிக்கென தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என, உயர் நீதிமன்றமே கண்டித்தது நினைவிருக்கலாம்.

இளமையில் திராவிடத் தலைவர்களால் ஈர்க்கப்பட்டு, இந்தி எதிர்ப்பாளன் ஆனேன். பிற்பாடு இந்திப் படங்களில் நடித்தேன். அது தொழிலுக்காக. பல மொழிகளில் நடித்த பிறகுதான் ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்இனிதாவதுஎங்கும்காணோம்’ என்பதை முழுதாக உணர்ந்தேன். ‘இந்தி ஒழிக’ என முழக்கமிடுவதோடு, நம் கடமை முடிந்துவிடவில்லை. ‘தமிழ் வாழ்க’ என உரக்கச் சொல்ல வேண்டும். சொல்வதோடு நிறுத்திவிடக் கூடாது, செயலிலும் காட்ட வேண்டும். இல்லையெனில், பழம்பெருமை மட்டும் பேசும் வாய்ச்சொல் வீரர்கள் என வரலாறு நம்மைப் பழித்துவிடும்.”

# ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை செயல்படுத்துமாறு கோரி வழக்கு

## முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தாக்கல்

சென்னை, ஜுலை 21

ஜெயலலிதா பல்கலைக் கழகம் அறிவிக்கப்பட்டு அதற்கான இடம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போதுவரை பல்கலைகழகத்தை செயல்படுத்த அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், பல்கலைக்கழகத்தை செயல்பட வைக்க வேண்டும் எனவும் உத்தரவிடக்கோரி முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைகழகத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும்,பதிவாளரை நியமிக்கவும் தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அவர் தாக்கல் செய்துள்ள



மனுவில், “விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்ட மாணவர்களின் நலனுக்காக, வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை பிரித்து, விழுப்புரத்தை தலையிடமாக கொண்டு டாக்டர். ஜெ.ஜெயலலிதா பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. துணை வேந்தர் நியமிக்கப்பட்டு, பல்கலைக்கழக கட்டுமானத்திற்காக விழுப்புரம் மாவட்டம், செம்மேடு கிராமத்தில், 70 ஏக்கர் நிலம் அ.தி.மு.க. அரசால் ஒத்துக்கப்பட்டது.

நிலம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போதைய அரசின் புறக்கணிப்பால் பல்கலைக்கழகம் இன்னும் பழைய தாலுகா அலுவலகத்தில் செயல்படுகிறது. இதுவரை பல்கலைக்கழகத்திற்கு பதிவாளரும், போதுமான பணியாளர்களும் நியமிக்கப்படாததால், பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அதன் முதுகலை மையத்தில் முதுகலை படிப்பில் சேர விண்ணப்பங்களை வரவேற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது சட்டத்தை மீறிய செயல், அந்த அறிவுப்புக்கு தடை விதிக்க வேண்டும்” என மனுவில் கோரியுள்ளார்.

ஈழநாடு



# வைத்தியசாலைகளுக்கு பிரதமரால் மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

கொழும்பு, ஜூலை 21

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கிடைக்கப்பெற்ற பல மில்லியன் ரூபா மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று முன் தினம் பிற்பகல் தெபருவ மற்றும் வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

அம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலையீட்டில் இந்த உபகரணத் தொகுதி வழங்கப்பட்டது.

தெபருவ ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வசந்த விஜேவீர மற்றும் வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் எம்.எம்.சீ.கயான் ஆகியோர் குறியீட்டு ரீதியாக பிரதமரிடமிருந்து மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொண்டனர்.

முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால் 30 மில்லியன் ரூபா மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் அண்மையில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன. அவ்வாறு கையளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஒரு தொகுதியே இவ்வாறு தெபருவ மற்றும் வலஸ்முல்ல வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களுக்காக பயன்படுத்தக்கூடிய வென்டிலேட்டர், ஒட்சிசன் கருவிகள், பீ.பீ.ஈ. கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அதில் உள்ளடங்கும்.

இந்த நிகழ்வில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், இலத்திரனியல் தொழில்நுட்ப மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சிலுவை பிரதிநிதி என்பதால் நான் தடுப்பூசி பெற்றுக்கொண்டேன்

## ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் விளக்கம்

வவுனியா, ஜூலை 21

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா பொருளாளர் என்ற வகையிலேயே தான் தடுப்பூசியை பெற்றதாக செஞ்சிலுவை சங்கத்தின் பெருளாளரும் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி அதிபருமான தனபாலசிங்கம் தெரிவித்தார்.

வவுனியா சுகாதார பிரிவினரால் அதிபரொருவர் முறைகேடான முறையில் தடுப்பூசி பெற்றுக் கொண்டதாக வெளிவந்த செய்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் வவுனியாவில் சில வைத்திய சாலைகளில் கொரோனா இடர்காலத் தொண்டர்களாக பணியாற்றி வருகின்றனர். அவர்களுடன் கொடுப்பனவுகள் தொடர்பில் நானும் தினமும் அவர்களை சந்திப்பவனாகவும் அவர்களின் செயல்பாடுகள் தொடர்பில் பார்வையிடும் பணியிலும் ஈடுபடுகின்றேன்.

இந்த வகையில் தொண்டர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதையால் அவர்களுடன் தொடர் பில் உள்ளவன் என்றவகையில் அச்சம் காரணமாக நானும் அதை பெற்றிருந்தேன்.

எனினும் நான் அதிபர் என்ற வகையில் குறித்த தடுப்பூசியை பெறவில்லை-என்றார்.



# கோடா, கசிப்பு வடிப்பதற்குரிய உபகரணங்களுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 21

பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சியில் கசிப்பு வடிப்பதற்கான கோடா மற்றும் கசிப்பு வடிப்பதற்குரிய உபகரணங்களுடன் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து குறித்த நபர் வல்லிபுரகுறிச்சி பகுதியில் சுமார் 65 லீற்றர் கோடா மற்றும் உபகரணங்களை மறைத்து வைத்திருந்தவேளையில் பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் நிதி வங்குரோத்து

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூலை 21**

**வரலாற்றில் முதற்தடவையாக இலங்கை நிதி வங்குரோத்து நிலையை எதிர்கொண்டுள்ளது. இதனால் நாட்டு மக்களுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எல்லா துறைகளும் சரிவை சந்தித்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையானது சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் எதிர்கொள்ளாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. நிதி ரீதியில் வங்குரோத்தடைவதற்கான முதல் அடி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 1988 மற்றும் 2008 காலப்பகுதியில் இதற்கு அண்மித்த வகையிலான நிலைமை காணப்பட்டது. 88 மற்றும் 2008 இல் எவ்வாறான நிலைமை நாட்டில் நிலவியது என்பது அனைவருக்கும் தெரியும். யுத்தம் நிலவியது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. சமூகம் பிளவுபட்டிருந்தது.

எனினும், இவ்விரு காலப் பகுதியிலும் எமது நாட்டு அரசின் வெளிநாட்டு நிதி வளத்துக்கு சந்தை திறந்திருந்தது. சர்வதேச நாணய நிதியத்தில் இருப்பும் இருந்தது. இதனால் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் நாடு வங்குரோத்து அடையவில்லை.

இன்று நாம் வரலாற்றில் முதன்முறையாக நிதி வங்குரோத்து நிலைக்கான முதல் அடியை வைத்துள்ளோம். இதன் பிரதிபலன் எவ்வாறு அமையுமென்ற அனுபவம் எமக்கு இல்லை. ஆனால் லெபலான், கிரிஸ், ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகளில் ஏற்பட்ட நிலை குறித்துதான் அனுபவம் உள்ளது.

எமது நாட்டு மக்கள் இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். புதிய வறுமை பிரிவொன்று உருவாகியுள்ளது. சகலருக்கும் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. சகல துறைகளும் சரிவை சந்தித்துள்ளன. அதேபோல ஆளும் மற்றும் எதிரணிமீதான அரசியல் நம்பிக்கையும் சமூகத்தில் அற்றுபோயுள்ளது-என்றார்.

# தடுப்பூசி நடவடிக்கைகளில் முன்னிலையில் இலங்கை!

கொழும்பு, ஜூலை 21

உலகம் முழுவதிலும் கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நாடுகளில் இலங்கை முன்னிலை வகிப்பதாக “அவ வேள்ட் இன் டேட்டா” என்ற “இணையத் தளம்” சுட்டிக் காட்டியுள்ளது.

குறிப்பாக நாளாந்த தடுப்பூசியேற்றும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதே இதற்கான காரணம் என கூறப்பட்டுள்ளது.

நாட்டில் இதுவரை 56 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு முதலாவது கோவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 16 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 81 சதவீதம் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளது. இந்த அளவு கம்பஹா மாவட்டத்தில் 79 சதவீதமாகும். களுத்துறை மாவட்டத்தில் 77 சதவீதமாகும். செப் ரெம்பர் மாத நிறைவுப் பகுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட் தடுப்பூசி ஏற்றுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

அதன் பின்னர் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றப்படும். இதுவரை 100 இலட்சத்துக்கும் அதிகமான கோவிட் தடுப்பூசிகள் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. மேலும் 20 மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் சில வாரங்களில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. நாட்டில் தடுப்பூசியேற்றும் வேலைத்திட்டத்துக்கு முப்படையினரின் முழுமையான ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

# கெரவலப்பிட்டி மின்சார மையத்தின் 40 சதவீத பங்குகள் அமெரிக்காவுக்கு

## மின்சாரத்துறையினர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் மின் உற்பத்தி மத்திய நிலையமாக செயல்பட்டு வரும் கெரவலப்பிட்டி மின் உற்பத்தி மையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதை அடுத்து அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலான தொழிற்சங்க நடவடிக்கை குறித்து மின்துறை தொழிற்சங்கங்கள் ஈடுபட உள்ளன.

இலங்கை மின்சார சபையை விற்பனை செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக, கெரவலப்பிட்டியில் உள்ள மின்னுற்பத்தி மையத்தின் 40 சதவீத உரிமையை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பது மற்றும் பல்வேறு விடயங்களை முன் வைத்து மின்சார சபையின் பல்வேறு தொழிற்சங்கங்கள் பேச்சில் ஈடுபடவுள்ளன.

இதன்போது எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய, அடுத்தகட்ட தொழிற்சங்க நடவடிக்கை குறித்த அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சினோபார்ம் செலுத்திய 95 வீதமானோருக்கு இலங்கையில் நோயெதிர்ப்பு சக்தி அதிகமாம்!

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தியவர்களில் 95 வீதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாவுக்கு எதிரான நோயொதிர்ப்பு சக்தியை உருவாக்கியதாக தெரிய வந்துள்ளதாக இலங்கை ஆய்வாளர்கள் சிலர் அறிவித்துள்ளனர்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மூலக்கூறு மற்றும் மருத்துவத் துறையின் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவு, சினோபார்ம் தடுப்பூசிக்கான நோயெதிர்ப்பு பிரதிபலிப்புக்களை ஆராய்ந்ததில் இது தெரிய வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்திய 95 வீதத்துக்கும் மேற்பட்ட நபர்களில் நோயெதிர்ப்பு சக்தியை தூண்டியமை கண்டறியப்பட்டது. கொவிட்-19 நோயைத் தொடர்ந்து இயற்கையான காணப்படும் அளவைப் போன்று, தடுப்பூசி நோயெதிர்ப்பு சக்தியை தூண்டியுள்ளது.

இந்த தடுப்பூசி டெல்டா மாறுபாட்டுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

டெல்டா மற்றும் பீட்டாவுக்கான நோயெதிர்ப்பு சக்தி அளவுகள், இயற்கையாக தொற்றுநோயைத் தொடர்ந்து வரும் நிலைகளுக்கு ஒத்ததாக இருப்பது ஆய்வில் தெரிய வந்தது. இருப்பினும் அல்பாவுக்கு எதிரான நோயெதிர்ப்பு சக்தி அளவுகள் குறைவாக இருந்ததும் தெரியவந்துள்ளது.

(அ)

# ரணிலின் முன்மொழிவை நிராகரித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை 21

அமைச்சர் உதய கம்மன்பில விற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க தாக்கல் செய்த முன்மொழிவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நிராகரித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை முழு அரசாங்கத்துக்கும் எதிராக இருக்கவேண்டும் என்ற ரணில் விக்ரமசிங்கவின் திருத்தங்களை ஏற்க முடியாது என்றும் சபாநாயகர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை குறித்த விவாதம் இடம்பெறுவதற்கு முன்னர் சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு எதிரானதே அன்றி முழு அரசாங்கத்துக்கும் எதிரானது இல்லை என்பதால் அதனை நிராகரிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

# 2022 ஜனவரி மாதம் முதல் பொலித்தீன் தடை அமுல்

கொழும்பு, ஜூலை 21

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பொலித்தீன் பைகளை தடை செய்வதற்கான முதல் கட்ட திட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைக்க சுற்றுச்சூழல் அமைச்சு மேற்கொண்ட திட்டத்தின் பிரகாரம் இந்த முன்மொழிவு செய்யப்பட்டது.

2022 ஜனவரி முதல், 10 அங்குல அகலம், ஐந்து அங்குல ஆழம் மற்றும் 16 அங்குல உயரம் அல்லது அதற்கும் குறைவான பொலித்தீன் பைகளுக்கு தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு பின்னர் மாற்று திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த சுற்றுச் சூழல் அமைச்சர், மாற்று வழிகள் இல்லாவிட்டாலும் தடை அமுல்படுத்தப்படும் என கூறினார்.

இலங்கையில் ஆண்டு தோறும் இரண்டு பில்லிய னுக்கும் அதிகமான பொலித்தீன் பைகள் பயன்படுத்தப்படுவதாக சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

# வல்வெட்டித்துறையில் மற்றொரு கிராமத்திலும் 13 தொற்றாளர்கள்!

## வடமராட்சியில் அதிகரிக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 21

**வல்வெட்டித்துறை தீருவில் கிராம அலுவலர் பிரிவில் 13பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தீருவில் கிராமத்தில் நேற்று முன்தினம் எழுமாறாக 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 13 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவலடி மற்றும் தீருவில் ஆகிய கிராமங்களிலும் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(அ)

# 215,641 பேருக்கு திங்களன்று ஒரே நாளில் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் நேற்று முன்தினம் மாத்திரம் 215,641 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் 104,617 பேருக்கும் இரண்டாவது டோஸ் 10,997 பேருக்கும் நேற்று முன்தினம் செலுத்தப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் பைசர் தடுப்பூசியின் முதல் டோஸ் 2,328 பேருக்கும் மொடர்னா தடுப்பூசியின் முதல் டோஸ் 97,699 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இலங்கையில் இதுவரை மொத்தம் 7,573,967 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தரவுகள் காட்டுகின்றன.

அதே நேரத்தில் ஸ்புட்னிக்-வி, சினோபார்ம் மற்றும் கொவிஷீல்ட் தடுப்பூசி 1,697,686 பேருக்கு முழுமையாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# உலகின் முதல் சூழல் நட்புறவு ஸ்மார்ட் முகக்கவசம் இலங்கையில் தயாரிப்பு!

கொழும்பு, ஜூலை 21

உலகின் முதல் சூழல் நட்புறவு ஸ்மார்ட் பேஸ் மாஸ்கை 'ப்ரீத்டெக்-எஸ் 3' வர்த்தக நாமத்தின் கீழ் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அறிமுகப் படுத்தினார்.

இந்த சூழல் நட்புறவு ஸ்மார்ட் பேஸ் முகக்கவசத்தின் உற்பத்தி செயல்முறைக்கு ஹிர்தராமணி குழுமம், இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சர்க்யூ டெக்னோலஜிஸ் ஆகிய மூன்று நிறுவனங்களும் கூட்டாக பங்களிப்பு செய்துள்ளன.

ப்ரீத்டெக்-எஸ் 3 முகக் கவசங்கள், உள்ளூரில் கிடைக்கும் நீடித்த மூல, இயற்கை மற்றும் மக்கும் பொருட்களின் கலவையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது.




சுவாச வீதத்தை அளவிடும் மேம்பட்ட கிராபெனின் அடிப்படையிலான சென்சார் (காப்புரிமை நிலுவையில் உள்ளது) அமைப்பு, முகக்கவச பொருத்தம், சி.ஓ 2 அளவு மற்றும் முகக்கவச பயன்பாடு ஆகியவற்றை மொபைல் பயன்பாடு வழியாக அணுகக்கூடியவை.

2021 ரோக்கியோ ஒலிம்பிக்குக்கு செல்லும் இலங்கை அணிக்கு இந்த ஸ்மார்ட் முகக் கவசங்கள் வழங்கப்படுகின்றன.

# தனிமைப்படுத்தல் மையத்தில் முல்லைத்தீவுப் பெண் கைது!

கொழும்பு, ஜூலை 21

வெயாங்கொடவில் வெளிநாட்டிலிருந்து திரும்பும் பெண்களுக்காக இயக்கப்படும் தனிமைப்படுத்தல் மையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்ட ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த மையத்தில் இருந்த ஏனைய பெண்கள் பற்றிய தகவல்களை அந்த பெண் சேகரித்தமையால், அவரின் சந்தேகத்திற்கிடமான நடத்தை குறித்து மையத்தின் அதிகாரிகள் வெயாங்கொடை பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளனர்.

அவரது கட்டாய தனிமைப்படுத்தல் காலம் முடிந்த பின்னர் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நடத்தப்பட்ட விசாரணையில், அவர் முல்லைத்தீவை சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது.

அவர் 2019 பெப்ரவரி மாதம் போலி பெயர் மற்றும் போலி ஆவணங்களை தயாரித்து சவுதி அரேபியாவுக்கு புறப்பட்டார் என தெரியவந்துள்ளது.

அரசாங்க தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட மற்ற பெண்கள் குறித்த தகவல்களை சந்தேகநபர் ஏன் சேகரித்தார் என்பதை அறிய வெயாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா

கொழும்பு, ஜூலை 21

மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா இராணுவத்தின் 58ஆவது தலைமை அதிகாரியாக நேற்றுக் காலை பதவியேற்றார்.

நேற்று காலை 10:45 மணிக்கு சுபநேரத்தில் இராணுவத் தளபதியிடம் இருந்து தனது நியமனக் கடிதத்தை பெற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக யாழ். மாவட்ட இரா ணுவ கட்டளைத் தளபதியாக பணியாற்றி இராணுவத் தலை மையகத்துக்கு இடம்மாற்றலாகிச் சென்ற மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, நேற்று காலை ராணுவத்தின்



தலைமை அதிகாரியாக இலங்கை ராணு வத் தளபதி சவேந்திர சில்வாவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்று உத்தியோகபூர்வ மாக கடமைகளை ஆரம்பித்தார்.

# யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 115 பேர் கொரோனாவால் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த தீவகம் வேலணையைச் சேர்ந்த 84 வயதுடைய ஆணொருவரும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில், 115 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு தடுப்பூசிகளை போட்ட 300 பொலிஸாருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 21

தடுப்பூசி செலுத்திக் கொண்ட 300 க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட தடுப்பூசியையும் செலுத்திக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் பிரதேச சபையின் அமர்வில் முன்னணி-ஈ.பி.டி.பி கருத்து மோதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபையின் தவிசாளர் மயூரன் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் யாழ்ப்பாணம் - அரியாலை கிழக்கு, காரைமுனங்கு மயானத்தில் உக்காத கழிவுகள் கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு இடையே கருத்து மோதல் இடம் பெற்றதன் காரணமாக சபையில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் செ.சிவலோசன் குறித்த விடயம் தொடர்பில் உரையாற்றும்போது,

அந்த மயானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே உக்கக்கூடிய கழிவுகளை கொட்டி மயான பகுதியை உயர்த்தும் முகமாகவே சபையினால் உக்கக்கூடிய கழிவுகள் கொட்டப்பட்டன.

எனினும் நல்லூர் பிரதேச சபையை சேர்ந்த சில கட்சிகளின் உறுப்பினர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்த இடத்துக்கு சென்று மக்களை குழப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அபிவிருத்தி திட்டங்களை குழப்பம் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். தமக்கு தவிசாளர் பதவி கிடைக்காதமையால் இவ்வாறு குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். கடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் நல்லூர் பிரதேச சபையினரால் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எனினும் தற்பொழுது த. மயூரன் தவிசாளராக பொறுப்பேற்ற பின்னர் பிரதேச மட்டங்களில் அபிவிருத்தி செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

அதனை விரும்பாத சில கட்சிகளின் உறுப்பினர்கள் அதனை கெடுக்கும் முகமாக மக்களை தூண்டிவிட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த மயானத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் உக்கக்கூடிய கழிவுகளை மாத்திரமே அந்த இடத்தில் கொட்டுவதற்கு சபையின் அனுமதியுடன் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது- என்றார்.

இதற்கு பதிலளித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர், தாம் அவ்வாறான கீழ்த்தரமான செயற்பாட்டில் ஈடுபடுவது இல்லை எனவும் ஒரு சில கட்சிகளின் உறுப்பினர்கள் அவ்வாறு இருந்தாலும் தாங்கள் அவ்வாறு அரசியல் செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

குறித்த விவாதம் அடுத்த இடம்பெற்றபோது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

# தேசியத்துக்காக முன்னின்றவர்களை ஏற்றுக்கொள்ள அமைப்புகள் இல்லை

## அருட்தந்தை சக்திவேல் கவலை



**கொழும்பு, ஜூலை 21**

**தேசியத்துக்கு முன்னின்றவர்களை ஏற்றுக்கொள்ள அமைப்புகள் இல்லை என சமூக நீதிக்கான செயல்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அரசியல் கைதிகளின் தற்போதைய நிலவரம் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் கைதிகள் விடுதலையாகி நீதிமன்ற செயல்பாட்டுக்கு ஊடாக ஒரு சிலர் குற்றங்கள் செய்யவில்லை என முழுமையாக வெளியே வந்து கொண்டிருக்கின்றார்கள்.

குற்றங்கள் புரிந்தவர்கள் என்ற அடிப்படையிலே நீதிமன்றம் அவர்களுக்குத் தண்டனை கொடுத்து , புனர்வாழ்வு கொடுத்து சமூகத்தில் இணைத்திருக்கிறது.

இந்த நிலையிலே சமூகமயப்படுத்தல் என்று கூறுகின்றபோது, சிறையில் இருந்து வந்தவர்களும் கூட தனித்தனி நபர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை ஒழுங்கமைப்பதில் எந்தவிதமான திட்டங்களும் எங்களிடம் இல்லை. இதன் காரணமாக தங்கள் பாதுகாப்பு கருதி, தங்கள் நலன் கருதி, தங்கள் பொருளாதாரம் கருதி இவர்கள் மீண்டும் இராணுவத்திடம் புலனாய்வாளர்களாக இருக்கின்றார்கள்.

எனவே இவர்களை நாங்கள் ஒருங்கிணைக்க வேண்டும் என்றால், ஒரு பாரிய அமைப்பொன்று தேவையாக இருக்கிறது. அந்த அமைப்பின் செயற்பாடுகளுக்குள்ளே நாம் போகவில்லை. அது ஒரு பொருளாதாரம் சார்ந்த ஒன்று. பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும்-என்றார்.

# கொழும்பு-ஷங்காய் விமான சேவை இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 21

கொழும்பில் இருந்து ஷங்காய் செல்லும் சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸின் விமான சேவைகள் ஜூலை 26 முதல் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 6 ஆம் திகதி கொழும்பிலிருந்து தென்மேற்கு சீனாவின் யுன்னான் மாகாணத்துக்கு சென்ற எம்.யு 714 என்ற விமானத்தில் சென்ற ஆறு பயணிகளுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் கொழும்பு-ஷங்காய் விமான சேவைகள் இடைநிறுத்தப்படும் அதே நேரத்தில் கொழும்பு-குன்மிங் விமான சேவைகளும் அடுத்த வாரம் முதல் இரத்து செய்யப்படும் என அந்நாட்டு சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

# இலங்கை வந்தடைந்த மாலைதீவு ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 21

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சொலிவ், 3 நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

மாலைதீவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள் 15 பேருடன், நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் யூ.எல். 102 என்ற விமான சேவையில், மாலைதீவு ஜனாதிபதி இலங்கையை வந்தடைந்துள்ளார்.

# ரிஷாத் வீட்டில் உயிரிழந்த சிறுமிக்கு நீதி கோரி யாழில் ஒருவர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 21



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டும் எனக்கோரி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்னால் மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தனது தங்கையின் இறப்பிற்கு நீதி வேண்டும். ஜனாதிபதி முத்த சிறுமி உயிரிழப்பு தொடர்பில் நேரடியாக தலையிட்டு சிறுமியின் இறப் புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும். சிறுமியின் மரண விசா ரணை அறிக்கை நேரடியாக ஜனாதி பதியிடம் கையளிக்கப்படும் எனக்கோரி மலையகத்தைச் சேர்ந்தவர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

# ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் சுற்றுலா பயணிகளுக்கு நாடு திறப்பு

கொழும்பு, ஜூலை 21

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாடு முழுமையாக திறக்கப்பட்டதும் ஒரு நாளைக்கு 500 முதல் 1,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என சுற்றுலாத் துறை அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டின் எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்டதிலிருந்து, 18,200 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதன் காரணமாக நாட்டுக்கு கிட்டத்தட்ட 40 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்ட வழிவகுத்தது என அமைச்சினால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதேவேளை சுற்றுலாத் துறை அபிவிருத்தி குறித்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மேலும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையில் பணியாற்றுவோரின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழி, நாட்டைத் திறந்து சுற்றுலாத் துறையை மீட்டெடுப்பதே என்றும் அவர் கூறினார்.

ஆகவே இலங்கையின் மீது பயணத் தடைகளை விதித்துள்ள அந்த நாடுகளின் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாட சுற்றுலாத்துறை அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

# இலங்கையில் கலைப்பிரிவுக் கல்வி

அண்மையில் தேசிய தணிக்கைக் காரியாலயத்தினால் உயர் கல்வி தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கலைப்பிரிவுக் கல்வியையும் பட்டதாரிகளின் வேலையின்மையையும் தொடுக்க முற்பட்டது. எமது இன்றைய பகுதி இவ்வறிக்கை தொடர்பாக பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் சிலர் முன்வைத்த மறுமொழியினை அடிப்படையாகக் கொண்டதாகும். கல்வி ரீதியான கொள்கைகள் பெரும்பாலும் பற்றாக்குறையான ஆய்வுகள், தவறான முன்னுரிமைகள், குறைபாடுள்ள பகுப்பாய்வுகளால் உந்தப்படுவதால் இவ்வறிக்கையின் சில கருத்துக்களை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது.

இலங்கையின் கலைப்பிரிவுக் கல்வியைப் பொறுத்தவரையில் மேம்படுத்த வேண்டிய விடயங்கள் பல. அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பற்றிய தவறான கருத்துக்களும் அவர்களின் ஆற்றல்களுக்கும் பட்டப்படிப்பின் தரம் மற்றும் பல்கலைகழகங்கள் இயங்கும் தன்மைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லாதிருப்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

**கலைப்பிரிவுக் கல்வியின் புறக்கணிப்பு**

அவ்வறிக்கையானது சமுதாயத்தை வளப்படுத்த ஆக்கபூர்வமான கலைப்பிரிவுக் கல்வி தேவை என ஒப்புக்கொள்கிறது. இருப்பினும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் விஞ்ஞானம் (Science), தொழில்நுட்பம் (Technology), பொறியியல் (Engineering), மற்றும் கணிதத்தை (Mathematics) உள்ளடக்கும் STEM கல்விக்காகவன்றி கலைப்பிரிவில் வளங்களைச் செலவிடும் நிலையில் நாம் இல்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. துடிப்பான கலைகள் உண்மையில் விருத்தியடைந்த ஒரு சமுதாயத்தின் குணாம்சமாகும். பொருளாதார அபிவிருத்திக்கான எமது முயற்சியில் கலைப்பிரிவை நாம் புறக்கணித்திருப்பது கவலைக்குரியது. கலைப்பிரிவுக் கல்விக்கான போதுமற்ற அரசாங்க ஆதரவும், தூரநோக்கற்ற தன்மையும் எமது கல்விக் கொள்கைகளைப் பிரதிபலிக்கின்றன.

கலைப்பீடங்களில் சமூகவியல், உளவியல், பொருளியல், புவியியல் போன்ற சமூக விஞ்ஞானப் பட்டங்களும் கல்வி, தொல்பொருளியல், நூலக விஞ்ஞானம் போன்ற பிரயோக அல்லது தொழில்சார் பட்டங்களும் வரலாறு, தத்துவம், இலக்கியம் போன்ற மனித வாழ்வியல் பாடங்கள்சார் பட்டங்களும் வழங்கப்படுகின்றன. ஏழ்மை, கல்விப் பிரச்சினை போன்ற சமூகப் பிரச்சினைகளையோ, நீர்த்தட்டுப்பாடு போன்ற தொழில்நுட்பம்சார் பிரச்சினைகளையோ முழுமையாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல்களையும் கண்ணோட்டத்தையும் மேற்குறிப்பிட்ட பாடநெறிகள் வழங்குகின்றன. கலைப்பிரிவுக் கல்வியால் விருத்திசெய்யப்படும் ஆற்றல்கள் பல்வேறு சமூக நெருக்கடிகளுக்குமான தத்துவ மற்றும் கருத்தியல் ரீதியான அடிப்படைகளையும், அவற்றுக்காக முன்வைக்கப்படும் தீர்வுகளின் சமூக, கலாசார, மனிதப் பின்விளைவுகளையும் கிரகிக்க வழிசெய்கின்றன. இதன் காரணமாகவே மதிப்பாய்வுகளின் போது பல்துறைசார் அணுகுமுறைகள் பெரும்பாலும் நாடப்படுகின்றன. இவ்வாறான கல்வியை அறவே பெற்றுக்கொள்ளாத, அல்லது சிறிதளவே கற்றுக்கொண்டவர்களால் பாரதூரமான சமூகப் பின்விளைவுகளை உருவாக்கக்கூடிய துறைகளின் கொள்கைகள் அமைக்கப்படுகின்றமை நல்லதோர் எதிர்காலத்தைச் சுட்டுவதாக இல்லை.

**எவரும் கைவிடப்படவில்லை?**

சமூகப் படிநிலைகளில் உயர்வடைவதை நோக்கமாகக் கொண்ட எமது இலவசக் கல்விமுறை, அலட்சியத்தின் காரணமாக அதன் குறிக்கோள்களிலிருந்து தவறிவருகிறது. வறிய சமூகங்களின் மாணவர்கள் வளங்கள் பெரிதளவற்ற பாடசாலைகளில் கல்விகற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றமை உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் நிச்சயம் வலியுறுத்தப்பட வேண்டும்.

அத்தணிக்கை அறிக்கையானது இரண்டாம்நிலைக் கல்வியிலுள்ள பல சிக்கல்களைச் சுட்டுவதோடு வளங்கள் குறைந்த பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் ஒப்பீட்டளவில் “இலகுவான” கலைப்பிரிவுக் கல்வியை உயர்தரப் பரீட்சைக்காகவும் பின்னர் பல்கலைக்கழகத்திலும் தொடர வேண்டிய கட்டாயம் உள்ளதெனத் தெரிவிக்கிறது. எனவே கலைப்பீடங்கள் இவ்வாறான குறை தயார் நிலையிலுள்ள மாணவர்களுக்கான இடமாகவே இருக்கின்றன என அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு பிரச்சினையாகவிருப்பது எமது கல்விமுறையேயன்றி மாணவர்களின் ஆற்றல் குறைபாடல்ல என்பது இனங்காணப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வாறான மாணவர்கள் உயர்கல்வியைப் பெறத் தகுதியற்றவர்கள் என அவ்வறிக்கை குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

நலிவான இரண்டாம்நிலைக் கல்வியைப் பெறும் மாணவர்கள் இயல்பாகவே கலைப்பீடங்களை வந்தடைவது உண்மையெனின் அம்மாணவர்களை வலுப்படுத்தக்கூடிய ஆதரவை இப் பாடநெறிகள் வழங்க வேண்டும். ஆனால் கலைப்பிரிவுப் பாடநெறிகள் இவற்றைக் கையாளும் வகையில் தற்போது இல்லை. ஆங்கில மொழிக் கல்விக்கான ஆதரவு இருப்பினும் ஏனைய அறிவாற்றல்களை மேம்படுத்துவதற்கான யுக்திகள் சிறிதளவிலேயே காணப்படுகின்றன. இன்று பல்கலைக்கழகங்களுள் நுழையும் மாணவர்கள் பெரும்பாலும் வளங்கள் போதியளவற்ற கல்விமுறை மற்றும் பரீட்சை நோக்கில் மனப்பாடம் செய்வதை ஊக்குவிக்கும் தனியார் வகுப்புக் கலாசாரத்தின் வெளியீடுகளாகவே காணப்படுகிறார்கள்.

பட்டப்படிப்புக்கான தகைமைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தேர்ச்சிகளுக்குமான பொருத்தமின்மையை எமது கல்விக் கொள்கைகள் நிவர்த்திக்க முன்வர வேண்டும். இங்கு ஆங்கில மொழிப் பயிற்சிகளோ, தகவல் தொழில்நுட்பம் சார் திறன்களின் விருத்தியோ, கலைப்பிரிவுக் கல்வியைத் தகர்ப்பதோ தீர்வுகளாக அமையமாட்டா. மாறாக எமது கல்விமுறைக்கு அத்தியாவசிமான வளங்களை அளிப்பதும், பட்டப்படிப்புக்கு முன் மாணவர்களை உரிய முறையில் தயார்படுத்துவதுமே பொருத்தமாகவிருக்கும்.

**வேலையின்மை தொடர்பான மீள்பரிசீலனை**

பெரும்பாலான பல்கலைக்கழகப் பட்டதாரிகளைப் பொறுத்தவரையில் “வேலை” என்பது அரசாங்கத் துறையில் பணிபுரிவதாகும். ஆகவே பட்டதாரிகள் “வேலையின்மை” எனக் குறிப்பிடும் போது வேறு வருமானமீட்டக்கூடிய நடவடிக்கைகளையோ, தனியார்துறைசார் உத்தியோகங்களையோ சிலசமயம் உள்ளடக்குவதில்லை. தொழில் என்றால் அது அரசாங்கத் தொழில் தான் என வரையறை செய்வது எமது புரவாண்மை மற்றும் உரிமை பாராட்டும் கலாசாரத்தையே பிரதிபலிக்கிறது. தனியார் துறைசார் தொழில்கள் ஆக்கபூர்வமான தன்மை, தொழில் திருப்தி மற்றும் அதிக சம்பளம் போன்றவற்றைக் கொண்டதாகக் கருதப்படுகின்றன. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட கண்ணோட்டமானது அரசதுறையில் உள்ள வேலைச் சூழல், தொழில் பாதுகாப்பு மற்றும் நன்மைகள் தனியார் துறையிலும் பார்க்க மிகையாகக் காணப்படுவதை வலியுறுத்துகின்றது. அத்தணிக்கை அறிக்கையானது இவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டுள்ளது. தனியார் துறை உத்தியோகங்களிலுள்ள நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வைப் பட்டதாரிகள் மத்தியில் பரப்புவதும், தனியார்துறையின் வேலைச் சூழ்நிலைகளின்பால் அரசாங்கம் கவனம் செலுத்துவதும் அறிக்கையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான வேலையற்ற கலைப்பிரிவுப் பட்டதாரிகள் பெண்களாகக் காணப்படுவதை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இருப்பினும் அவர்களின் வேலை யின்மை அல்லது வேலை செய்வதில் ஈடுபாடின்மைக்கான காரணங்களை அது ஆராயவில்லை. 2017 தொழிலாளர் கேள்வி மதிப்பாய்வானது இது தொடர் பான மேலதிக விளக்கத்தை அளித்துள் ளது. இம்மதிப்பாய்வின் படி பெண் களின் “குடும்பப் பொறுப்புகள்”, “பாது காப்புச் சிக்கல்கள்”, மற்றும் “மகப்பேறு விடுமுறை” போன்றவை தொடர்பாக முதலாளிகளிடம் எதிர்மறையான ஒரு போக்கு நிலவிவருகின்றது.

பெண் தொழிலாளர்களின் சம்பளமற்ற பராமரிப்புப் பொறுப்புக்களை உள்ளடக்குவதில் முதலாளிகளுக்குள்ள தயக்கமும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான அச்சமும் வேறு ஒரு சமூகப் பிரச்சினையை எடுத்துக்காட்டுகின்றன. இப்பிரச்சினையானது பல்கலைக்கழகக் கல்விக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பெண்களின் சம்பளமற்ற பராமரிப்புப் பொருளாதாரம் மற்றும் கருத்தில் கொள்ளப்படாத அவர்களது வீட்டு வேலைகள் பற்றிய கலந்துரையாடல்கள் இங்கு பொருந்துகின்றன. பல பெண்கள் முறையான தொழில்களை விடுத்து முறைசாராத் தொழில்களை நாடுகின்றமைக்கான காரணங்களிலொன்று இவ்வீட்டுப் பராமரிப்புப் பொறுப்பாகும். இவற்றுக்கு மேலதிகமாக வேலைத் தளங்களிலும், வேலை முடித்து தாமதமாக வீடு திரும்பும் போதும் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்கள் தொழிலாளர் சக்தியில் பெண்களின் குறைவான பங்கெடுப்புக்கான காரணங்களாக உள்ளன. எனவே வேலையின்மை பற்றிய ஒரு முழுமையான கிரகிப்பைப் பெற இவ்வாறான காரணிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகள் எப்போதும் தீவிரமான பகுப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்டமைவதில்லை. அதோடு அவை பெரும்பாலும் கல்வித்துறையிலுள்ள நெருக்கடிகளை நிவர்த்திப்பதை விடுத்து அவற்றை மேலும் கடுமையாக்குகின்றன. ஆகவே தீர்க்கமான ஆலோசனை மற்றும் முழுமையான சிந்தனையின் பின்னரே கொள்கைத் தலையீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஃபர்சானா ஹனிஃபா



**ஃபர்சானா ஹனிஃபா**
**கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் விரிவுரையாளராகக் கடமையாற்றுபவராவார்.**

**மொழிபெயர்ப்பு:**
**கோபிகா சிவகுமார்**




> சுமார் 12 வெளிநாடுகளின் அரசுகளை இலக்கு வைக்கும் தகவல் திருட்டில் ஈடுபட்டதாக சீன பாதுகாப்பு அமைச்சகத்துடன் தொடர்புடைய நான்கு பேர் மீதான குற்றச்சாட்டுகளை அமெரிக்க நீதித்துறை சமீபத்தில் அறிவித்திருந் தது. இந்த நிலையில், தற்போது சீனா மீது மூன்று வல்லரசு நாடுகள் சுமத்தியிருக்கும் குற்றச் சாட்டு, தகவல் தொழில்நுட்ப உலகின் ஒட்டு மொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளது.

## சீனாவை குற்றம்சாட்டும் வல்லரசுகள்:

# அரசுகள், தனியார் நிறுவனங்களை இலக்கு வைக்கும் சைபர் தாக்குதல்



**கோர்டன் கொரேரா**

மிகப்பெரிய அளவில் சைபர் தாக்குதல்களை இவ்வருட ஆரம்பத்தில் சீனா நடத்தியிருப்பதாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை குற்றம்சாட்டி யிருக்கின்றன.

மைக்ரோசாஃப்ட் எக்ஸ்சேஞ்ச் சர்வர்கள் இலக்கு வைக்கப்பட்டதன் மூலம் குறைந்தபட்சம் 30 ஆயிரம் நிறு வனங்கள் உலக அளவில் இந்த சைபர் தாக்குதலால் பாதிக்கப்பட் டிருக்கலாம் என கருதப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரிட்டன், சீன அரசு ஆதரவுடன் செயல் பட்ட நபர்களே இந்த தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் என கூறியிருக் கிறது. ஐரோப்பிய ஒன்றி யமோ, சீன பிராந்தியத்தில் இருந்தே இந்த தாக்குதல் நடந்துள்ளதாக குற்றம்சாட்டியிருக் கிறது.

விரிவான உளவு செயல்பாடு மற்றும் பொறுப்பற்ற நடத்தையின் விரிவான வடிவமாக சீன உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் விளங்குவதாகவும் இந்த நாடுகள் கூறியுள்ளன.

அனைத்து வித சைபர் தாக்குதல் விவகாரத்தில் தங்களுடைய நாடு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை ஏற் கெனவே சீனா நிராகரித்திருந்தது.

எனினும், சீனாவில் இருந்தே இந்த தாக்குதல்கள் நடந்துள்ளதாக முக்கிய வல்லரசு நாடுகள் கூட்டாக குற்றம்சுமத்தி யிருப்பதால் இந்த விவகாரம் முக்கியத் துவம் பெற்றுள்ளது. இந்த தாக்குதல்கள், இதற்கு முன்பு தாங்கள் கண்டிராதவை என மேற்கு நாடுகளின் உளவு அமைப்புக ளின் அதிகாரிகள் கூறுகின்றனர்.




மைக்ரோசாஃப்ட் எக்ஸ்சேஞ்ச் சர்வர் களை இலக்கு வைத்த ஹேக்கர்கள், அந்த மென்பொருளை பின்வாசல் வழியாக அணுகுவதற்கான முயற்சியில் ஈடுபட்டி ருந்ததாக பிரிட்டன் கூறுகிறது.

இதை பார்க்கும்போது இது மிகப் பெரிய அளவில் நடந்த உளவு பார்த்தல் நடவடிக்கை என்றும் தனி நபர் தகவல் திருட்டு முதல் அறிவுசார் சொத்துகள் தொடர்பான தகவலை திருடுவதுவரை ஹேக்கர்கள் கைவரிசை காட்டியிருக் கிறார்கள் என்றும் பிரிட்டன் தெரிவித் துள்ளது.

மைக்ரோசாஃப்ட் எக்ஸ்சேஞ்ச் சர்வர் களுக்குள் நுழைய சீன குழுக்கள் பயன் படுத்திய ஊடுருவல் முயற்சியை மேலும் சில ஹேக்கர்கள் குழுவும் அணுகியதா கவும், அவர்கள் வெளிநாட்டு கணிப் பொறிகளுக்குள் நுழைந்து தகவல் திருட் டுக்கு அவற்றை எளிதாக்கியிருப்பதா கவும் தெரிய வந்துள்ளதாக பிரிட்டன் தேசிய சைபர் பாதுகாப்பு மைய அதிகா ரிகள் கூறியுள்ளனர்.

பிரிட்டனில் இதுபோல பாதிக்கப் பட்ட 70 நிறுவனங்களுக்கு பிரத்யேக அறிவுறுத்தல்களை அந்த மையம் வழங்கியிருக்கிறது.

“பொறுப்பற்ற நடத்தையாக கருதப் படும் இந்த ஊடுருவல், ஏற்கெனவே தங்களுக்கு பரீட்சயமான வடிவத்தில் நடந்துள்ளது,” என்று பிரிட்டன் வெளியுறவு செயலாளர் டோமினிக் ராப் தெரிவித்துள்ளார்.

“சீன அரசாங்கம் இதுபோன்ற முறைசார்ந்த சைபர் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதில் தங்களுக்கு தொடர்பு இல்லையென் றால், தொடர்பு இருப்பவர்களை பொறுப்புடைமையாக்க வேண்டும்,” என்றும் டோமினிக் ராப் வலியுறுத் தினார்.

சீன உள்நாட்டு பாதுகாப்பு அமைச் சகம், இதுபோன்ற ஹேக்கர்கள் குழுவுடனான தமது உறவை துண்டித் துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக் காவும் கூறியிருக்கிறது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “ஒப்பந்த ஹேக்கர்களை பணியமர்த்தி அவர்கள் மூலம் அங்கீகரிக்கப்படாத உலகளாவிய சைபர் தாக்குதல்களில் ஈடுபட ஒரு உளவு நிறுவனத்தை சீனா தமது தனிப்பட்ட நலனுக்காக அமைத் திருப்பதாக வெளிவரும் தகவல் ஆழ்ந்த கவலையைத் தருகிறது” என்று கூறப்பட் டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், “இதுபோன்ற ஹேக்கர்களின் செயல்பாடு, பாதுகாப்பு ஆபத்துக்கு வழிவகுத்துள்ளது. இது அரசுத் துறைகள், தனியார் நிறுவனங் களுக்கு பொருளாதார ரீதியாக கடும் இழப்பை ஏற்படுத்தும்” என்று கூறி யுள்ளது.

பிரிட்டன் வரிசையில் சீனாவின் செயல்பாட்டை கண்டித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், யீவு 40 மற்றும் யீவு 31 போன்ற இரு ஹேக்கர்கள் குழுக்களுக்கும் சீன உள்நாட்டு பாது காப்பு அமைச்சகத்துக்கும் தொடர்பு உள்ளது என்றும் கூறியுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் ஆகியவை தங்களுடைய கடுமையான அதிருப்தியை வெளிப்படுத் திய அதே சமயம், சீனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி விளக்க வில்லை.

இதேவேளை, சீனாவை தொடர்பு படுத்தும் மைக்ரோசாஃப்ட் சர்வர்கள் விவகாரத்தை விட குறைவான பாதிப் பைக் கொண்ட டெக்சாஸைச் சேர்ந்த சோலார் விண்ட்ஸ் என்ற நிறுவன ஹேக் கிங் சம்பவத்துடன் தொடர்புடைய ரஷ்யா மீது இந்த நாடுகள் புதிய தடைகளை விதித்துள்ளன.

தங்களுடைய எக்ஸ்சேஞ்ச் சர்வர்கள் இலக்கு வைக்கப்பட்ட தகவலை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் கடந்த மார்ச் மாதமே அறிவித்திருந்தது. சீனாவுடன் தொடர்புடைய ஹஃப்னியம் என்ற குழுவே அதற்கு பொறுப்பு என்றும் அந்த நிறுவனம் கூறியது. ஆனால், அந்த குற்றச்சாட்டை சீனா அப்போது மறுத்திருந்தது.

உலக அளவில் பிரபலமான கணினிப் பயன்பாடு மென்பொருளாக அறியப் படும் மைக்ரோசாஃப்ட் எக்ஸ்சேஞ்ச் சர்வர்கள் இலக்கு வைக்கப்பட்ட தகவலை உலகின் மூன்று முக்கிய வல்ல ரசுகள் உறுதிப்படுத்தியிருப்பது, பல முக்கிய மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருப்பதாகவே கருதப்படுகிறது.

சுமார் 12 வெளிநாடுகளின் அரசுகளை இலக்கு வைக்கும் தகவல் திருட்டில் ஈடுபட்டதாக சீன பாதுகாப்பு அமைச்சகத்துடன் தொடர்புடைய நான்கு பேர் மீதான குற்றச்சாட்டுகளை அமெ ரிக்க நீதித்துறை சமீபத்தில் அறிவித் திருந்தது. இந்த நிலையில், தற்போது சீனா மீது மூன்று வல்லரசு நாடுகள் சுமத் தியிருக்கும் குற்றச்சாட்டு, தகவல் தொழில் நுட்ப உலகின் ஒட்டுமொத்த கவனத்தை யும் ஈர்த்துள்ளது.

**நன்றி:பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் - 45 நிமிடம்

21. மழை பெய்தால் நிலம் நனையும் மழை பெய்துள்ளது எனவே ………………….. பொருத்தமான முடிக்கும் சொல்லினைத் தெரிவு செய்க.
1) நிலம் நனைந்துள்ளது  2) நிலம் நனையும்  3) நிலம் நனைகிறது

22. சிறிய விலங்கில் இருந்து பெரிய விலங்கு வரை ஒழுங்கு முறையில் இருக்கும் தொடரைத் தெரிவு செய்க.
1) எறும்பு, அணில், பல்லி, முயல் நாய்
2) நாய், முயல், அணில், பல்லி, எறும்பு
3) எறும்பு, பல்லி, அணில், முயல், நாய்

23. உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது.




இதற்கேற்ப சிறிய வட்டமொன்று 5kg எனின் செவ்வகமொன்றின் நிறை யாது?
1) 5kg  2) 6kg  3) 10kg

24. ஒரு கூடையில் உள்ள மாபிள்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிக்கும். 50ஆவது நிமிடத்தில் கூடையில் உள்ள மாபிள்கள் 40 எனின், 53ஆவது நிமிடத்தில் கூடையில் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 80  2) 160  3) 320

25. இடம் இருந்து வலமாக நான்கு மாணவர்கள் எண் அட்டைகளுடன் நின்றார்கள். முதலாவது நபர் 7 உம், மூன்றாவது நபர் 1 உம் இரண்டாவது நபர் மூன்றாவது நபரிலும் 5 அதிகமான எண்ணும் நான்காவது நபர் பூச்சியமும் வைத்து இருந்தனர். எனின், இவர்கள் வைத்திருந்த எண் என்ன?
1) 7530  2) 7150  3) 7610


26.




இங்கு இலக்கம் 3 ற்கு எதிரே உள்ள இலக்கம் எது?
1) 1  2) 4  3) 2


27. A = 1, B = 5, C = 3, D = 6 எனின்,
A + B = ……………………..
1) D  2) B  3) C

28.




இரண்டு எண்சட்ட எண்களினையும் கூட்டினால் கிடைக்கும் எண்?
1) 30  2) 20  3) 40

29.



இவ் உருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 12
2) 8
3) 15

30. 10 நண்பர்கள் பண்டிகை ஒன்றின் போது தமக்குள் கை கொடுத்து மகிழ்சியை பகிர்ந்து கொண்டார்கள் எனின் இவர்களுக்குள் கை கொடுக்கப்பட்ட சந்தர்பங்கள் எத்தனை?
1) 90  2) 45  3) 100

31. கூடை ஒன்றில் 3 சிவப்பு நிறக் குடைகளும் 5 நீல நிறக் குடைகளும் 6 வெள்ளை நிறக் குடைகளும் இருந்தன. இக் குடைகளினைப் பார்க்காது எழுமாறாக ஒவ்வொன்றாக எடுக்கும் போது நிச்சயமாக சிவப்பு நிறக் குடை வருவதற்கான வாய்ப்புக்கள் எத்தனையாவது தடவையாக இருக்கும்.
1) 3  2) 12  3) 11

32. புத்தகம் ஒன்றினை விரிக்கும் போது அப் புத்தகத்தின் இடது பக்கத்தில் வரக்கூடிய தொடர் இலக்கம் எதுவாக இருக்கலாம்.
1) 97  2) 101  3) 90

# பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 139 பேர் ஒரே நாளில் கைது!

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 21**

**நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது வெவ்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 139 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

சுமார் 15 ஆயிரம் பொலிஸார் இந்தச் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது துப்பாக்கி வைத்திருந்தக் குற்றச்சாட்டில் 11பேரும், போதைப்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்களுக்காக 1,355 பேரும், மதுபானம் அருந்திய நிலையில் வாகனங் களைச் செலுத்தியதற்காக 454 பேரும், வெவ்வேறு குற்றங்களுடன்தொடர்புடைய 97 பேரும், பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்ட 438 பேரும், சந்தேகத்தின் பேரில் 384 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் போக்குரவத்துக் குற்றங்களுக்காக 40 ஆயிரத்து 448 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



# தப்பியோடிய இரு கைதிகள் மீண்டும் கைது

கொழும்பு, ஜூலை 21

தும்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 கைதிகள், நீதிமன்றில் அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டு மீளச் சிறைக்கு அழைத்துச் செல்லும் வழியில் தப்பிச் சென்றனர்.

குறித்த நான்கு பேரும் ரம்பொடகல்ல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு சிறைச்சாலை பஸ்ஸில் அழைத்துச் செல்லப்பட்ட போது, அதிகாரிகளைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர்.

தப்பியோடிய இருவர் உடனேயே பிடிபட்டனர். ஏனைய இருவரும் பொலிஸாரின் தேடுதலின்போது கைதுசெய்யப்பட்டனர். (இ)

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 191 பேர் சிக்கினார்கள்

கொழும்பு, ஜூலை 21

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும்தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 191 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 185 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பகுதிகளில் வைத்து 2 ஆயிரத்து 966 வாகனங்களில் வந்த 6 ஆயிரத்து 615 பேர் நேற்று முன்தினம் சோதனைக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். இவர்களில் அனுமதியின்றி மாகாணங்களைக் கடந்துசெல்ல முற்பட்ட 276 பேர் திருப்பி அனுப் பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# முடக்கத்திலிருந்து மேலும் 2 பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் நேற்றுக் காலை 6 மணி முதல் அமுலாகும் வகையில் இரண்டு பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிவாவல கிராம சேவகர் பிரிவின் சாகரதெனியவத்தைப் பகுதி



தனிமைப்படுத்தலிலிருந்து விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடா வஸ்கடுவ மேற்கு கிராம சேவகர் பிரிவும் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளது. (இ)

# சிறுமி மரணம் தொடர்பில் தீவிர விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைதுசெய்க!

## மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 21

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நேற்றுக் காலை பொலிஸ் தலைமையகத்தில் சந்தித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் குழுவினர் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

சிறுமி பணிபுரிந்த வீட்டில் அவருக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் வன்புணர்வு கொடுமைகள் மற்றும் அவருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அழுத்தங்கள் மற்றும் இந்தச் சம்பவத்தில் உள்ள மர்மங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் பழனி திகாம்பரம், பாராளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் உதயகுமார் மற்றும் எம். வேலுகுமார் ஆகியோரே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த சிறுமியின் மரணத்துக்கு நியாயம் கிடைக்கும்வரை தமிழ் முற்போக்குக் கூட்டணி அழுத்தங்களைப் பிரயோகிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா போதைப்பொருள் கைப்பற்றல்

கொழும்பு, ஜூலை 21

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில், சுமார் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைபற்றப் பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு கிலோகிராம் 300 கிராம் ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்கான சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது என்றும், இது தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 1997 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தகவல் தருமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# குழுக்களுக்கிடையில் மோதல்; ஓட்டோ சாரதி ஒருவர் கொலை

கொழும்பு, ஜூலை 21

பாணந்துறை - பின்வத்த பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் பின்வத்த, உபோசதாராம வீதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஓட்டோ சாரதியான மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பண முரண்பாடு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும், கொலை செய்த நபர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையில் பலத்த காயங்களுடன் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் குறித்த ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் பின்வத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ)

# ஈராக்கில் பெரும் குண்டுவெடிப்பு 30 பேர் பலி! பலர் படுகாயம்!!

## ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம் என சந்தேகம்



பாக்தாத், ஜுலை 21,

ஈராக்கில் பெருமளவு மக்கள் கூடும் பிரபல சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பில் 30 பேர் பலியாகினர். பலர் காய மடைந்தனர்.

இதுகுறித்து ஈராக் மருத்துவ அதிகாரிகள் கருத்து வெளியிடு கையில் "ஈராக் மக்கள் பக்ரீத் கொண்டாட்டங் களுக்கு தயா ராகும் நிலையில் தலைநகர், பாக்தாத்தில் வகைலா சந்தைப் பகுதியில் திங் கட்கிழமை இரவு வெடி குண்டு வெடித் தது.

"பக்ரீத் கொண்டாட்டத்துக் காக மக்கள் அலங்காரப் பொருட்கள் மற்றும் உணவு பொருட்களை வாங்கிக் கொண் டிருந்தபோது இந்த கோர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் இதுவரை 30 பேர் பலியாகி உள்ளனர். பலர் காய மடைந்து அருகிலுள்ள மருத் துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

"இந்த குண்டுவெடிப்புக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. தொடர்ந்து விசா ரணை நடந்து வருவதாக ஈராக் ராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் இந்தத் தாக்குதலை ஐஎஸ் தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம்" என்றும் தெரி வித்துள்ளனர்.

இந்த ஆண்டில் ஈராக்கின் கிழக்குப் பகுதியில் நடந்த மூன் றாவது குண்டுவெடிப்பு இது வாகும். 2017 ஆம் ஆண்டு ஈராக்கில் ஐ.எஸ் ஆதிக்கத்தை அமெரிக்க படைகளுடன் இணைந்து ஈராக் அரசு கட்டுக் குள் கொண்டு வந்தது. போரில் ஐ.எஸ். தோற்கடிக்கப்பட்ட தாகவே ஈராக் அறிவித்தது. இந்த நிலையில் இம்மாதிரி யான குண்டு வெடிப்புகளை ஐ.எஸ் அமைப்பு அவ்வப் போது நடத்தி வருவது குறிப்பி டத்தக்கது. (ஐ)

# சீனாவில் குரங்கு வைரஸ் தொற்றிய கால்நடை மருத்துவ நிபுணர் மரணம்

## முதல் மனித உயிரிழப்பு அங்கு பதிவாகியது

பெய்ஜிங், ஜுலை 21,

குரங்குகளின் இருந்து மிக அரிதாகப் பரவுகின்ற வைரஸ் கிருமி ஒன்றினால் பாதிக்கப் பட்ட சீன நாட்டின் கால்நடை மருத்துவர் ஒருவர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. "monkey B virus" எனப்படுகின்ற புதிய வைரஸ் கிருமியினால் அண்மையில் ஏற்பட்ட முதலா வது மனித உயிரிழப்பு இது என்று சில சர்வதேச ஊடகங் கள் இந்தச் செய்தியைப் பதிவு செய்துள்ளன.

பெய்ஜிங்கில் உள்ள ஒரு மருத்துவ ஆய்வு நிலையத்தில் பணியாற்றி வந்த 53 வயதான கால்நடைச் சத்திரசிகிச்சை நிபு ணரே புதிய வைரஸ் தொற்றி னால் உயிரிழந்துள்ளார் என் பதை சீனாவின் நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிறு வகம் உறுதிப்படுத்தியுள் ளது.

கடந்த மார்ச்சில் இறந்த இரண்டு குரங்குகளின் உடல் களைப் பிரித்து ஆய்வு மேற் கொண்ட அவர், பின்னர் நோய்த் தொற்றுக்கு இலக்கா னார் என்று கூறப்படுகிறது. அவருக்குக் கடும் காய்ச்சல், வாந்தி, மற்றும் நரம்புப் பாதிப்பு அறிகுறிகள் ஏற் பட்டுள்ளன. சிகிச்சைகளுக்குப் பின் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி அவர் உயிரிழந்தார். அவருக்கு குரங்கு-பி வைரஸ் தொற்றியிருப்பதை மருத்துவ ஆய்வுகள் உறுதிசெய்தன.

பொதுவாக் "குரங்கு அம்மை" எனப்படும் வைரஸ் கிரிமியில் இருந்து மாறுபட்ட புதிய இனத்தைச் சேர்ந்தது குரங்கு-பி வைரஸ். அதனை herpesvirus ட என்றும் அழைக் கின்றனர். உலகிற்கு அது புதி யது அல்ல. ஆனால் அதன் தொற்றுக்கள் மிக அரிதா னவை. தற்போது உலகில் பரவிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் போன்றே விலங்குகளில் இருந்து மனிதர் களுக்குப் பாய்கின்ற (zoonotic) ஒரு வைரஸ் கிரிமியே "குரங்கு-பி வைரஸ்" (monkey B virus) என அழைக்கப்படுகிறது.

# 'பெகாசஸ்' உளவு பார்த்த விவகாரம் இந்திய பாராளுமன்றத்தில் சர்ச்சை

புதுடில்லி, ஜுலை 21

இந்தியப் பாராளுமன்றக் கூட்டத்தொடரின் இரண்டா வது நாளான நேற்று காலை முதலே மக்களவையில் அமளி யில் ஈடுபட்டதால் அவையை பிற்பகல் 2 மணிவரை தலைவர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார்.

பெகாசஸ் உளவு விவகாரம், பெட்ரோல் விலை உயர்வு தொடர்பாக விவாதிக்க வேண் டும் என எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் கூட்டம் தொடங்கி யது முதலே இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டனர். இதை யடுத்து இரு அவைகளும் நேற்று முன்தினம் நாள் முழுவ தும் ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர்கள் உத்தர விட்டிருந்தனர்.

கூட்டத்தொடரின் இரண் டாவது நாளான நேற்று காலை முதலே எதிர்க்கட்சிகள் மக்கள வையில் அமளியில் ஈடுபட்ட தால் அவையை பிற்பகல் 2 மணிவரை தலைவர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார். அதேபோல, மாநிலங்களவையிலும் அமளி ஏற்பட்டதால் பிற்பகல் 12 மணி வரை அவையை ஒத்திவைத்த னர்.

# இங்கிலாந்தில் அதிக தளர்வுகள் எச்சரிக்கும் மருத்துவ நிபுணர்கள்

லண்டன், ஜுலை 21

மருத்துவ நிபுணர்களின் எச் சரிகைக்கு மத்தியில் இங்கிலாந் தில் முழுமையான தளர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பிரிட்டனில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று டெல்டா வைரஸ் காரணமாக அதிகரித்த நிலை யில் சற்று குறைந்தன. இந்த நிலையில் இங்கிலாந்தில் முழு மையாக கொரோனா கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

இதனைத் தொடர்ந்து பொது இடங்களில் மக்கள் கூடு வதற்கு தடையில்லை, இரவு நேர மதுபான விடுதிகளுக்கு அனுமதி போன்ற அறிவிப்புகள் வெளியாகியுள்ளது. இந்த தளர்வு கள் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்த நிலையில், முழுமை யான கட்டுப்பாடுகளை தளர்த் துவது எதிர்காலத்தில் தொற்றை அதிகரிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

பிரிட்டனைப் பொறுத்த வரை 60வீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள் ளது.

முன்னதாக பிரிட்டன் நாட்டு சுகாதார செயலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. பிரிட்டன் சுகாதார செயலர் சாஜித் ஜாவித். இவர் இரண்டு டோஸ் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளார். இந்நிலையில், இவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியது.

மேலும் சாஜித் ஜாவித்தை சமீபத்தில் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் சந்தித்ததால் அவர் தன்னை தனிமைப்படுத் திக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கொரோனா முதல் அலையின்போது போரிஸ் ஜான்சன் கடுமையாக பாதிக்கப்பட்டு மீண்டார் என் பது தெரிந்தது.

# சிங்கப்பூரில் 13 வயது சிறுவன் கொலை



சிங்கப்பூர், ஜுலை 21,

சிங்கப்பூரில் சக மாண வரைக் கொன்றதாக 16 வயது பாடசாலை மாணவர் மீது கொலைக்குற்றச்சாட்டு பதியப் பட்டுள்ளது. இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது.

13 வயது மாணவர் ஒருவ ரின் சடலம் கழிவறையில் இருப்பதாகக் கூறி ஒரு பள்ளி யிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காவல்துறைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சம்பவ இடத்தில் ஒரு கோடா ரியை காவல்துறையினர் பறி முதல் செய்தனர்.

கொலை செய்த மற்றும் கொலை செய்யப்பட்ட மாண வருக்கும் இடையே தொடர்பு இல்லை என்பது ஆரம்பநிலை விசாரணையில் தெரியவந் துள்ளது.

சிங்கப்பூரில் பள்ளிகளில் வன்முறைச் சம்பவங்கள் நடப்பது அரிதானது. உலகி லேயே மிகக்குறைந்த குற்றங்கள் நடக்கும் நாடாக சிங்கப்பூர் உள்ளது.

இந்த சம்பவத்தால் பிரபல மான அந்த தனியார் பள்ளி சில மணி நேரம் மூடப்பட்டது. வகுப்பறைகளிலிருந்த மாண வர்கள், ஒரு நபர் கோடாரியு டன் சென்றதைப் பார்த்ததாக குடும்பத்தினருக்கும் நண்பர் களுக்குத் தகவல் அனுப்பிய தாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குற்றம்சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்ட பின்னர் மாணவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு குறித்து நேற்று நீதிமன்ற விசாரணை நடந்தது. 16 வயது சிறுவன் மீது கொலைக்குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. சிங்கப் பூரில் பொதுவாக இதுபோன்ற கொலைக்குற்றச்சாட்டுக்கு அதிகபட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்கப்படும். ஆனால், குற்றம்சாட்டப்பட்டுள்ள சிறார் 18 வயதுக்கும் குறைவாக இருப்பதால் அவருக்கு ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

# இந்திய விமானங்களுக்கு கனடாவின் தடை நீடிப்பு



ஒட்டவா, ஜுலை 21,

இந்திய பயணிகள் விமானங் களுக்கு ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை தடை நீடிக்கப்படுவதாக கனடா நேற்று அறிவித்துள் ளது.

இந்தியாவில் டெல்டா வகை கொரோனா வைரஸ் பர வல் கண்டறியப்பட்டதும், இந்தியாவில் இருந்து வரும் பய ணிகள் விமானங்களுக்கு கனடா அரசு தடை விதித்தது. அதாவது, கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி இந்த தடை விதிக் கப்பட்டது. ஜுலை 21 ஆம் திகதியுடன் இந்த தடை முடிவுக்கு வர இருந்த நிலையில், மேலும் ஒரு மாதம் நீடித்து கனடா அரசு உத்தரவு பிறப்பித்துள் ளது.

இதன்படி, வரும் ஆகஸ்ட் 21 ஆம் தேதி வரை இந்திய பயணிகள் விமானங் களுக்கான கனடாவின் தடை நீட்டிக்கப் பட்டுள்ளது. இது குறித்து விளக்கம் அளித்துள்ள கனடா போக்குவரத்து துறை மந்திரி, "மருத்துவ நிபுணர் களின் பரிந்துரையின் படியே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், இந்தி யாவில் நிலைமை இன்னும் மிக மோசமாகவே உள்ளது. டெல்டா வகை கொரோனா பரவலை தடுக்கும் நோக்கில் இந்த தடை நீட்டிக்கப்பட்டு உள்ளது" என்றார்.

# அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனைக்கும் கொவிட் தொற்று



அமெரிக்க ரென்னிஸ் நட்சத்திரமான கோகோ காஃப் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதனால் அவர் ரோக்கியோ ஒலிம்பிக்கில் போட்டியிடமாட்டார் என்றும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

17 வயதான காஃப் இந்த தகவலை சமூக ஊடகங்களில் அறிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் கிராண்ட்ஸ்லாம் போட்டிளில் குறிப்பிடத்தக்க பங்கெடுத்தலுக்கு பிறகு இது காஃப்பின் முதல் ஒலிம்பிக் தோற்றமாக இருந்தது.

எனினும் தற்சமயம் அவருக்கு இந்த வாய்ப்பு கைநழுவிப் போயுள்ளது.

”நான் கொவிட்டுக்கு சாதகமாக சோதித்தேன், அதனால் ரோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட முடியாது என்ற செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் ஏமாற்றமடைகிறேன்”

”ஒலிம்பிக்கில் அமெரிக்காவை பிரதிநிதித்துவப் படுத்துவது எப்போதுமே என்னுடைய கனவாகவே இருந்தது, எதிர்காலத்தில் இதை நனவாக்க எனக்கு இன்னும் பல வாய்ப்புகள் இருக்கும் என்று நம்புகிறேன்.” என்று காஃப் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜெனிபர் பிராடி, ஜெசிகா பெகுலா மற்றும் அலிசன் ரிஸ்கே ஆகியோருடன் 12 பேர் கொண்ட அமெரிக்க அணியை இளம் ரென்னிஸ் நட்சத்திரமான காஃப் வழிநடத்துவார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த அறிவிப்பினால் முழு அமெரிக்க ரென்னிஸ் ஒலிம்பிக் குழுவும் மனம் உடைந்துவிட்டதாக அமெரிக்க ரென்னிஸ் சங்கம் ஒரு அறிக்கையில் தெரிவித்தது.

ரோக்கியோவில் உள்ள விளையாட்டு வீரர்கள் கிராமத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான முதல் போட்டியாளர்களாக இரு தென்னாபிரிக்க உதைபந்து வீரர்கள் முன்னதாக பதிவானார்கள்.

# ரமிஸ் ராஜாவின் விமர்சனம்



இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி பாடசாலை மற்றும் பல்கலைக்கழக அணிகளுக்கிடையிலான ஆட்டம் போல் இருந்ததாக பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரமிஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணி 36.4 ஓவர்களில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனிடையே பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான ரமிஸ் ராஜா, முதல் ஒருநாள் போட்டியை பகுப்பாய்வு செய்துள்ளார்.

அதில் அவர் முதலாவது ஒருநாள் போட்டியை, இது ஒரு பல்கலைக்கழகத்திற்கும் பாடசாலை அணிக்கும் இடையிலான விளையாட்டு என்று கூறினார்.

ஆட்டத்தில் இந்தியர்கள் பல்கலைக்கழக வீரர்களைப் போல வலுவாக தோற்றமளித்தனர், அவர்கள் பாடசாலை அணி கிரிக்கெட் வீரர்களைப் போல விளையாடிய இலங்கை அணியினரை போராடச் செய்தனர்.

திறமை, ஆட்டத்தின் மீதான புரிதல், திட்டம் மற்றும் அதை செயல்படுத்துதல் ஆகிய அனைத்திலுமே இரு அணிகளுக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டுக்கு இது மிகச்சவாலான நேரம். ஏனெனில் சொந்த மண்ணில் தங்களுக்கு சாதகமாக பெரிய ஓட்ட இலக்கை அடிக்குமளவுக்கான ப்ளாட் பிட்ச்சை தயார் செய்தும் கூட, சராசரி ஸ்கோரையே அடித்தது இலங்கை அணி.

இலங்கை வீரர்கள் சுழற்பந்து வீச்சுகளை ஆடிய விதம், சுழற்பந்துகளுக்கு ஆடவே தெரியாதுபோல இருந்தது. பொதுவாக இலங்கை வீரர்கள் சுழற்பந்துகளை திறம்பட எதிர்கொள்வார்கள். ஆனால் தற்போதைய இலங்கை வீரர்கள் அந்த நிலையை இன்னும் எட்டவில்லை என்று கூறினார்.

# அவுஸ்ரேலிய அணியின் ஒருநாள் தலைவராக அலெக்ஸ் கெரி!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்ரேலிய அணியின் தலைவராக அலெக்ஸ் கெரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நிரந்தர தலைவர் அரோன் பிஞ்சுக்குக் காயம் ஏற்பட்டதால் அவர் முதலாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்க மாட்டார் என கிரிக்கெட் அவுஸ்ரேலியா உறுதிப்படுத்தியுள்ளது.

இதனால், 29 வயதான அலெக்ஸ் கெரி முதல்முறையாக அவுஸ்ரேலிய அணியை வழிநடத்தவுள்ளார். இதன் மூலம் அவுஸ்ரேலிய ஒருநாள் அணியின் 26ஆவது அணித்தலைவர் என்கிற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இதுவரை 42 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான அலெக்ஸ் கெரி, 4 அரைசதங்கள் ஒரு சதம் அடங்களாக ஆயிரத்து 91 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.





# இன்டர் மிலனில் தொடரும் லுக்காக்கு?

இத்தாலிய சீரி ஏ உதைபந்தாட்டக்கழகமான இன்டர் மிலனின் முன்களவீரரான றொமெலு லுக்காக்கு இப்பருவகாலத்தில் இன்டர்மிலனை விட்டு வெளியேறமாட்டார் என இன்டர்மிலன் இரசிகர்களுக்கு லுக்காக்குவின் முகவர் பெடெரிக்கோ பஸ்டொரெல்லோ உறுதியளித்துள்ளார்.

இன்டர்மிலனில் நிதிப் பிரச்னைகள் நிலவுகையிலேயே பஸ்டொரெல்லோ மேற்படி உறுதியை அளித்துள்ளார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டிலிருந்து 2019ஆம் ஆண்டில் இன்டர்மிலனில் இணைந்த 28 வயதான லுக்காக்கு, 72 போட்டிகளில் 47 கோல்களைப் பெற்றிருந்தார்.



# செல்சியில் இணையும் கேன்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்கள வீரரான ஹரி கேன், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியில் இணையும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில், 27 வயதான கேன் செல்சிக்கு செல்லும்போது, செல்சியின் முன்களவீரர் தம்மி ஏப்ரஹாம் டொட்டென்ஹாமுக்குச் செல்வதோடு பணம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்நகர்வுக்கு கேன் ஒத்துக் கொள்வாரா என்பது தெளிவில்லாமலுள்ளது.

ஏனெனில், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்குச் செல்லும் வகையில் கேன் பயிற்சிக்கு சமூகமளிக்கமாட்டார் எனக் கூறப்படுகிறது.

# அப்பழுக்கற்ற தலைவர் சிவசிதம்பரம் இல்லாமல் இருப்பது மிகப்பெரிய குறை

## கூட்டுத் தலைமையிலாவது அவரது வெற்றிடத்தை நிரப்ப முயற்சிக்க வேண்டும் என்கின்றார் சிவாஜி

"சிவசிதம்பரம் போன்ற தலைவர்கள் இன்று இல்லாமல் இருப்பது நமக்கு மிகப் பெரிய குறை. அதுதான் இன்றைய பிரச்னை. அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் இணைத் தலைவர்களாக இணைந்து செயற்பட்ட செயற்பாட்டை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அது போன்ற ஒரு நிலைமை எதிர்காலத்தில் உருவாகுமா தெரியவில்லை. ஆகக்குறைந்தது கூட்டுத் தலைமையிலாவது அவரது இடத்தைக் கிட்டத்தட்ட நிரப்ப முடியுமா என்று பார்ப்போம். அவரது சாதனைகள் எண்ணிலடங்காதவை."

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

தமிழ்த் தலைவர்களில் ஒருவராக விளங்கிய அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 98ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று நெல்லியடி பஸ் நிலையப் பகுதியிலுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் தலைவர்களில் ஒருவராக விளங்கிய அமரர் சிவசிதம்பரம் கரவெட்டி மண் பெற்ற ஒரு பெரிய தவப்புதல்வன். கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் அமரர் சிவசிதம்பரத்தின் திருவுருவச் சிலையை 2015ஆம் ஆண்டு இங்கே நிறுவியுள்ளது.

அமரரின் 98ஆவது பிறந்த நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை சூட்டி வணக்கம் செலுத்துகின்றோம். இதனைக் கொரோனா காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செய்து கொண்டிருக்கின்றோம். சிவசிதம்பரம் தமிழினத்திற்காக மிகப் பெரிய காரியப் பணிகளை ஆற்றி இருந்தார்.பாராளுமன் றத் தின் உப சபாநாயகராக இருந்துள்ளார். உடுப்பிட்டி தொகுதியில் இரண்டு தடவைகள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

1960ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றபோது ஜூலை மாதம் அவரது பிறந்த தினத்திலேயேதான் வெற்றி பெற்றார். இன்னொரு சிறப்பம்சம் அவரது பிறந்த தினத்துக்கு அடுத்த நாள் ஜூலை மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் அதிகூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நல்லூர் தொகுதியில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

எத்தனையோ பிரச்னைகளுக்கு மத்தியில் துணிச்சலோடு செயல்பட்ட தலைவர் எங்களுடைய பிரச்னைகளை சர்வதேச அரங்குக்கு இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்குக் கொண்டு செல்வதில் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோருடன் பேச்சில் ஈடுபட்டமை அவரது திறமைகளின் வெளிப்பாடு.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி கொண்டுவரப்பட்டது. நேற்றுடன் 42 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அந்தச் சட்டத்திலே தமிழ் இளைஞர்களான தலைவர்கள் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற பலர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது நீதிமன்றத்திலே மிகத் துணிச்சலாக வாதாடி ஒரு சதமும் பெறாமல் உரத்துக் குரல் கொடுத்தவர். அவர் பனாகொடை இராணுவ முகாம், வெலிக்கடை சிறைச்சாலை, நீதிமன்றம் என மாதக்கணக்கில் அலைந்து திரிந்து பல இளைஞர்களின் வழக்குகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜரான பெருமகன். 98 ஆவது பிறந்த நாளில் அவருக்கு தமிழினம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக் கின்றது. அன்னாரது நூற்றாண்டையும் நாங்கள் வெகுசிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக் கின்றோம்.

அவரது சாதனைகள் எண்ணிலடங்காதது. சாதாரண மக்கள் அணுகக்கூடிய விதத்தில் தொகுதியிலே மக்கள் அவரைச் சந்திக்கலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் வல்லிபுரக் கோயிலுக்குச் செல்வர். தனது பணத்தைச் செலவு செய்து முத்திரை வாங்கி பாஸ்போர்ட்டுக்கு பிணைக்குக் கையொப்பம் இட்டுக் கொடுப்பார். அவ்வாறு செயற்பட ஓர் அப்பழுக்கற்ற தலைவரை 98ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்" - என்றார். (இ - 02)


# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 12 - 1931 |  | 15 - 07 - 2021 |

## திருமதி தேவராசா தில்லையாச்சி

யாழ். சுழிபுரம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மலேசியா Kuala Lumpur, ஜேர்மனி Kirchheim unter Teck ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தேவராசா தில்லையாச்சி கடந்த (15.07.2021) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை – கமலம் தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற கதிரேசு தேவராசாவின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி), கிரிதரகோபாலன் (ஜேர்மனி), குமரன் (ஜேர்மனி), கண்ணதாஸ்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தங்கம்மா, நாகம்மா, முத்தாச்சி, வரதராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும், V.R.S மணியம் லோகவதி (மலேசியா) தம்பதிகளின் அருமைச் சம்பந்தியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சபாபதிப்பிள்ளை, இராசலட்சுமி, பொன்னம்மா, ஆச்சிமுத்து, சொக்கலிங்கம், பாக்கியம், பாக்கியலெட்சுமி மற்றும் வேதநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பகவதி (மலேசியா), காலஞ்சென்ற ரதி, நாகரத்தினம்(இலங்கை), செல்வரத்தினம், இராசரத்தினம், விஜயரத்தினம், சிவகுமார் மற்றும் பாலரத்தினம், சந்தனகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயாரும்,சுசிலாதேவி (ஜேர்மனி), தங்கமலர் (கனடா), சுபத்திரா (ஜேர்மனி), விஜயகௌரி (ஜேர்மனி), கோகிலவாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேமகுமாரி (இலங்கை), பிறேமலதா, பிறேமவதனி (பிரான்ஸ்), பிறேமகௌரி (லண்டன்), புஸ்பகலா (இலங்கை), கமலகாந்தன் ஆகியோரின் ஆசை மாமியும், ரூபி–ஸ்ரேபான் (ஜேர்மனி), இராகுலன் (ஜேர்மனி), தாரணி–வின்ரோன் (ஜேர்மனி), முகிலன் (ஜேர்மனி), இரயீவன்(ஜேர்மனி), கிரியன்(ஜேர்மனி), ஜெனா(ஜேர்மனி), ரோகினி (ஜேர்மனி), கயன் (ஜேர்மனி), துர்க்கா (கனடா), துளசிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 24 Jul 2021 9:00 AM - 4:00 PM
Sunday, 25 Jul 2021 9:00 AM - 4:00 PM
Waldfriedhof Notzinger Steige 100, 73230 Kirchheim unter Teck, Germany

கிரியை :
Monday, 26 Jul 2021 9:00 AM - 12:00 PM
Waldfriedhof Notzinger Steige 100, 73230 Kirchheim unter Teck, Germany

தொடர்புகளுக்கு :
Mobile : +4970219828590
Phone : +4917645323496

தகவல்
குமரன் - மகன்


# சிவசிதம்பரத்தின் பிறந்தநாளில் வடமராட்சியில் அஞ்சலி நிகழ்வு

கரவெட்டி, ஜூலை 21

தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உடுப்பிட்டி மற்றும் நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 98ஆவது பிறந்ததினம் நேற்று முற்பகல் 10 மணியளவில் நெல்லியடி, கரவெட்டி ஆகிய பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

நெல்லியடி பஸ் நிலையத்தில் அமைந்துள்ள அமரர் மு. சிவசிதம்பரத்தின் உருவச் சிலைக்கு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன இணைந்து அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டன.

அன்னாரின் உருவச்சிலைக்கு முன்பாகக் கலந்துகொண்டவர்கள் மலர் தூபி, தீபம் ஏற்றி அஞ்சலித்தனர்.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ச.அரவிந்தன், தங்க முகுந்தன் மற்றும் ஆதரவாளர் ஆகியோர் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

விசேடமாக தங்க முகுந்தன் அன்னாரின் உருவச்சிலைக்கு பென்னாடையும் போர்த்தி மதிப்பளித்தார். (இ - 02)



# கல்வி அமைச்சருடனான பேச்சு தோல்வி; தொடர்கின்றது ஆசிரியர்கள் போராட்டம்

## நேற்றும் சில பகுதிகளில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

**கொழும்பு, ஜூலை 21**

**கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பிரீஸுக்கும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற பேச்சு தீர்மானம் எதுவுமின்றி முடிவடைந்துள்ளது.**



குறித்த கலந்துரையாடல் வெற் றியளிக்காத காரணத்தால் ஆசிரியர்களின் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக்கொண்டுள்ள நிலையில், அதனைத் தொடர்வதற்கு ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

சம்பளப் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டின் சில பகுதிகளில் ஆசிரியர் சங்கங்களால் நேற்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(இ)

## அரசும்...

எதிர்க்கட்சியும் அந்தச் சாதனைக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நிலையியல் கட்டளைக்கு அமைய நான் முன்வைத்த திருத்தம் அனைவருடனும் தொடர்புடையது. எரிபொருள் விலை அதிகரிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களில் ஒருவரே விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர். ஆனால், விலையை அதிகரிக்க வேண்டியவர் நிதி அமைச்சரே ஆகும். நிதி அமைச்சரே அரசில் அது தொடர்பில் தீர்மானிப்பார். இதனால் அவரும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

இதேவேளை, இந்த விடயம் வாழ்க்கைச் செலவு குழுவில் கலந்துரையாடப்பட்டது எனவும் கூறப்பட்டது. இதன்படி அதில் உள்ள அமைச்சர்களும் அதில் தொடர்புபட வேண்டும். அத்துடன் அமைச்சரவையும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். அதேபோன்று புதிய நிதி அமைச்சரவையும் இதில் உள்ளடக்க வேண்டும். அவர் மீண்டும் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதியும் இதற்குப் பொறுப்பானவர் என்றாலும் அவரை இதில் உள்ளடக்கவில்லை. அவருக்கு எதிராக குற்றப் பிரேரணையே கொண்டு வர முடியும். இந்நிலையில், அமைச்சரவையில் அனைவரும் இதில் தொடர்புபட்டுள்ளதால் அவர்கள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் நான் முன்வைத்த கருத்துக்களுக்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் என்னை விமர்சித்தமை தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

சாகர காரியவசம் முன்வைத்த கருத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பிரேணை முன்வைக்கப்பட்டது. அவர் அந்தக் கருத்தை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் அந்த நிலைப்பாட்டில் இப்போது இல்லை. இப்போது அமைச்சர்கள் அனைவரும் ஒன்றாக உள்ளனர். அரசு முழுமையாக ஒற்றுமையாக இருக்கின்றது. இதனாலேயே நான் இந்தத் திருத்தத்தை முன்வைத்தேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகவே எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. இதற்கு அமைச்சர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளனர். நாங்கள் கோடிக்கணக்கில் கடனாளியாக உள்ளோம். 2016 ஆம் ஆண்டை விடவும் அதிகளவுக்குப் பணம் அச்சிடப்பட்டுள்ளது. இது நெருக்கடிக்குத் தள்ளியுள்ளது. இப்போது அந்நியச்செலாவணி இல்லாமல் போயுள்ளதால் டொலருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசு நெருக்கடி நிலையில் இருக்கின்றது.

இரசாயன உரத்தைக் கொண்டு வர பணம் இல்லாத காரணத்தினாலேயே இவர்கள் சேதன உரம் பற்றி பேசுகின்றனர். பொருட்களை இறக்குமதி செய்யவும் அந்நியச் செலவணி இல்லை. இப்போது இந்த அரசு மீது மக்களின் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. 10 மாதங்களுக்குள் இந்த அரசு பாரிய பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த அரசு கின்னஸ் சாதனைக்குள் உள்வாங்கப்பட வேண்டும். இவ்வாறு நாட்டை சிக்கல்களுக்குள் கொண்டு வந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர முடியாது என்றால் எதிர்க்கட்சியும் கின்னஸ் சாதனைக்குள் செல்ல வேண்டும்.

இந்நிலையில், நம்பிக்கையில்லா பிரேரணையை முழு அரசுக்கு எதிராக கொண்டு செல்ல வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக உள்ளது. எனினும், அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களிப்பேன்” - என்றார். (இ)

## தப்பினார்...

சேர்ந்த கபிர் ஹாசிம் வழிமொழிந்த நிலையில் திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு தினங்கள் இப்பிரேரணை மீது விவாதம் இடம்பெற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இரு நாள் விவாத நாட்களிலும் அரச, எதிர்க்கட்சியினரிடையில் கடும் தர்க்கங்களும் வசைபாடல்களும் சேறு பூசுதல்களும் சபைக்குதவாத வார்த்தைப் பிரயோகங்களும் தாராளமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த இரு நாள் விவாதத்திலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ,பசில் ராஜபக்ஷவோ உரையாற்றவில்லை.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,மக்கள் விடுதலை முன்னணி (ஜே .வி.பி,), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி என்பன ஆதரவாக வாக்களித்த நிலையில் அரசுடன் இணைந்து அதன் பங்காளிக் கட்சிகளும் எதிர்க்கட்சிப் பக்கத்திலுள்ள இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பி.க்களான இஷாக் ரஹ்மான், முஷாரவ் ஆகியோரும் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு எம்.பி.யான அலி சப்ரி ரஹீம் , சுயாதீன எம்.பி.யாக செயற்படும் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரும் எதிராக வாக்களித்தனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் ஆதரவாக வாக்களித்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய எம்.பிக்களான ஹாரிஸ்,பைசல் காசிம், நசீர் அஹமட், தௌபீக் இதேபோன்றே ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான குமார வெல்கம, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி எம்.பியான சி.வி.விக்னேஸ்வரன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான ரிஷாத் பதியுதீன் மற்றும் விஜேதாச ராஜபக்ஷ உள்ளிட்ட 12 எம்.பிக்கள் சபைக்கு வருகை தரவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட 10 எம்.பிக்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரன், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரா குமார திசாநாயக்க உள்ளிட்ட மூவரும் எதிராக வாக்களித்தனர். (அ)

## நான்காவது...

மேலும் மக்கள் தொகையில் 8 வீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ள நிலையில் தடுப்பூசிகளில் மட்டும் நம்பிக்கை வைப்பதன் மூலம் முன்னேற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெல்டா வைரஸ் மாறுபாடு வேகமாக பரவி வருவதாகவும், நாடு இப்போது நான்காவது அலையின் விளிம்பில் உள்ளது என்றும் பத்மா குணரத்ன சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, இந்த காலகட்டத்தில் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நான்காவது அலையைத் தடுக்கவும் பொதுமக்களும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## மக்களைப்பற்றி...

துள்ளார். அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற் றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா முகாமைத்துவத்தில் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் கோமாளித்தனமாக நடந்துகொள்கிறது.

மேலும் துறைசார்ந்த சுகாதாரத் தரப்பினரிடம் பொறுப்பை ஒப்படைக்காமல், இனவழிப்பை மேற்கொண்ட இராணுவத்திடம் ஒப்படைத்து பொறுப்பற்ற விதமாக நடந்துகொள்கிறது-என்றார். (அ)

# சீனாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் கடனைப் பெற இலங்கை அரசு முயற்சி

கொழும்பு, ஜூலை 21

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்படவுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை 500 மில்லியன் டொலராக அதிகரிக்க நடவடிக்கை இடம்பெற்று வருவதாக நிதி அமைச்சின் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை எதிர்கொள்ளும் கடுமையான அந்நிய செலாவணி நெருக்கடியை கையாளும் முகமாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பான ஒப்பந்தம் குறித்து தற்போது நிதி அமைச்சுக்குள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

இலங்கை சார்பாக கடன் வழங்குநராக செயற்படும் நிதி அமைச்சுக்கும் சீன அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் இந்த இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 700 மில்லியன் டொலர் கடனைப் பெற இலங்கை ஒப்புக் கொண்ட நிலையில் மார்ச் மாதத்தில் முதல் 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மீதமுள்ள 200 மில்லியன் டொலர் ஜூலை மாதத்தில் பெறப்படவுள்ள நிலையில் சீன தூதுவர் மற்றும் சீன அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக நிதி அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அந்நிய செலாவணி நெருக்கடியைத் தீர்க்க சீன வங்கியிடமிருந்து 1.5 பில்லியன் டொலர் கடனைப் பெற இலங்கை மத்திய வங்கி ஒப்புக் கொண்டது.

இதேவேளை கடந்த மே மாதம் இலங்கைக்கு பங்களாதேஷில் இருந்து 200 மில்லியன் டொலர் கடனும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட் தொற்றால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்றுவரை 116 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

# யாழ்.குடாநாட்டில் 28 பேர் உட்பட வடக்கில் 31 பேருக்கு தொற்றுறுதி!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 23 பேர் உட்பட வடக்கில் 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 369 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**யாழ்.மாவட்டத்தில் 23 பேர்**

அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 05 பேர்,

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,


வேலணை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 09 பேர்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்



**கிளிநொச்சி மாவட்டத்தில் 02 பேர்**

பளை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

வவுனியா மாவட்டத்தில் ஒருவர்

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

**மன்னார் மாவட்டத்தில் 02பேர்**

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்,

இவர்களுடன் பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 03 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## அதிகரித்த...

போதைய சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரவும் அமைச்சரவை அனுமதி அளித்ததுள்ளது என்று வர்த்தக அமைச்சர், பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

## நேற்று 1,511...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 87 ஆயிரத்து 930 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 980 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 62 ஆயிரத்து 828 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 21 ஆயிரத்து 232 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (இ)

## அமைச்சர்...

20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த இவரை, தமிழ் முற்போக்கு கூட்டணி, கூட்டணியிலிருந்து இடைநியுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு பிரதம...

ஆராயப்பட்டது.

இந்த நிலையில் வவுனியா மாவட்ட செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேனவை வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்க ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு முதன்முறையாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரதம செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் நடத்தப்பட்டால் அரசின் தோல்வி உறுதி

## திகாம்பரம் எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 21

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கடவுளாகக் கருதிய சிங்கள மக்களே இன்று அவரை விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். எனவே, தேர்தலொன்று நடைபெறும் பட்சத்தில் அரசு படுதோல்வியடையும் என்பது உறுதி."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவை கடவுளாகவே சிங்கள மக்கள் கருதினர். அவர் அரசியல்வாதி அல்லர். சிவில் நிர்வாகி என்பதால் பல மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனவும், அதிரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனவும் மக்கள் நம்பினர். எனினும், அதே மக்கள் இன்று அவரைத் திட்டுவதற்குத் தொடங்கிவிட்டனர். அந்தவகையில் எல்லா வழிகளிலும் இந்த அரசு படுதோல்வியடைந்துள்ளது. தேர்தலொன்று வரும்பட்சத்தில் அதில் எதிர்க்கட்சியே வெற்றிபெறும். - என்றார். (இ)

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை மூலம் அரச கூட்டுக்குள் மேலும் வலுத்தது ஒற்றுமை

## நாடாளுமன்றில் வாசுதேவ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 21

**"அமைச்சர் உதய கம்மன்பில வுக்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசிலுள்ள கட்சிகளுக்கிடையே ஒற்றுமை மேலும் வலுப்பெற்றுள்ளது."**

**- இவ்வாறு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, மேலும் பேசுகையில்,

"வாழ்க்கைச் செலவுக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையே அமைச்சர் அறிவித்துள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது சரியான தகவல் கூறியவருக்கு சூடு நடத்துவதைப் போன்றதே.

அரசுக்குல் பல கட்சிகள் உள்ளன. ஒவ்வொரு கட்சிகளாலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர், எரிபொருள் விலையேற்றத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பால் வலுசக்தி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று கூறினார். அதனை அடிப்படையாகக் கொண்டு அரசுக்குள் பிளவுகள் உள்ளன என்ற நினைப்பில் எதிரணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர். ஆனால், அதன்மூலம் அரசுக்குள் இன்னும் நெருக்கமே ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். அரசுக்குள் பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். பல்வேறு கோணங்களில் இந்தப் பிரச்சனைகள் தொடர்பாகப் பார்க்கின்றனர். இதன்படி பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனாலும், அரசின் ஒற்றுமையில் வீழ்ச்சியடையவில்லை" - என்றார். (இ)

### எரிபொருள் விலை அதிகரிப்பு தற்காலிகமானது

# மக்கள் வழங்கிய ஆணையைப் பாதுகாக்க சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## சபையில் அமைச்சர் நாமல் திடசங்கற்பம்



கொழும்பு, ஜூலை 21

"அமைச்சரவையினரும் துறைசார் அமைச்சரும் இணைந்தே எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானித்தனர். இந்தத் தீர்மானம் தற்காலிமானது. அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை நாம் பாதுகாப்போம். நாட்டை சுபீட்சத்துக்குக் கொண்டுசெல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கிய ஆணையைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்."

- இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டில் அமையப்பெற்றிருந்த ஒவ்வொரு அரசுகளும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன. 2005ஆம் ஆண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்றுக் கொண்டபோது 80 இற்கும் குறைவான உறுப்பினர்களே இருந்தனர். எனினும், முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய உள்ளிட்டவர்களை இணைத்துக்கொண்டு அரசொன்றை அமைத்ததுடன், விடுதலைப்புலிகளையும் தோற்கடித்திருந்தார்.

போரின் பின்னர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்ததுடன், மறை பொருளாதார வளர்ச்சியை நேர் வளர்ச்சியாக்கினார். நாட்டில் வேலைவாய்ப்பின்மை சதவீதத்தையும் குறைத்திருந்தார். ஆசியாவில் மிகவும் வேகமாக அபிவிருத்தியடையும் நாடாகவும் இலங்கையை மாற்றினார்.

இன்று ஏற்பட்டுள்ள பிரச்னையானது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 50 வருடகால அரசியல் வரலாற்றில் எதிர்கொள்ளாத ஒரு பிரச்சினையாகும். விடுதலைப்புலிகளுடன் நாம் போரிட்டபோது அது இலங்கையில் எழுச்சி கண்டிருந்த ஒரு தீவிரவாதப் போராட்டமாக இருந்ததால் பல நாடுகள் பொருளாதார ரீதியாக உதவியிருந்தன. ஆனால், தற்போதைய பிரச்சினை முழு உலகத்துக்கும் பொதுவானது.

கொரோனாத் தொற்று காலப்பகுதியில் அரசாட்சியை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. என்றாலும் இந்தச் சவால்களை நாம் எதிர்கொண்டுள்ளதுடன், பொருளாதாரத்தையும் பாதுகாத்துள்ளோம். உலகில் வேலைவாய்ப்புகள் பறிபோகும் சூழலில் நிறுவனங்களுடன் பேசி வேலைவாய்ப்புகளை பாதுகாக்க முடிந்துள்ளது. அந்நியச் செலாவணியைப் பாதுகாத்துள்ளோம். அதேபோன்று கொரோனாத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசித் திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த அனைத்து சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் 10 அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

கூட்டணி அரசில் பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றும் நபர்கள் இருக்கின்றனர். பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. அதேபோன்று கட்சிகளுக்கும் தனிப்பட்ட கருத்துகள் இருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்.

அரசாட்சியில் நிதி முகாமைத்துவம் என்பது மிகவும் முக்கியமான காரணியாகும். நிதி வெளிப்படைத்தன்மையையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் பாதுகாத்துக்கொள்ளும் காலத்துக்கேற்ற தீர்மானமாகவே எரிபொருள் விலையில் அதிகரிப்பை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சரவையும் துறைசார் அமைச்சரும் இணைந்துதான் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டோம். இது தற்காலிமான அதிகரிப்பாகும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கருத்தையே அதன் பொதுச் செயலாளர் கூறியிருந்தார்" - என்றார். (இ)

# தொற்றால் மக்களுக்குத் தேவையான மானியங்களை வழங்கியுள்ளது அரசு

## அமைச்சர் தினேஷ் கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 21

எரிபொருள் விலைகள் அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு பாதிப்பானது என்பதனை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஆனாலும் கொரோனாத் தொற்றால் மக்களுக்குத் தேவையான மானியங்களை அரசு வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்க்கட்சி பிரேரணையைக் கொண்டு வரும்போது அதில் அர்த்தம் இருக்க வேண்டும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடபபட்டுள்ள விடயங்களைப் பார்க்கும்போது அமைச்சர் தவறு செய்யவில்லை. இதனால் இது அரசியல் ரீதியிலான தீர்மானமே.

அமைச்சரவையின் உபகுழுவின் தீர்மானத்தையே உதய கம்மன்பில அறிவித்துள்ளார். இதனால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை எந்தவித அடிப்படையும் இல்லாதது.

எதிரணியினர் மிகவும் அநீதியான வகையில் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சியிலேயே ஒரே நிலைப்பாட்டில் யாரும் இந்தத் தீர்மானத்தில் இல்லை.

எமது நாட்டின் பொருளாதார நிலைமையின் பிரகாரம் எரிபொருள் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவுக்குப் பாதிப்பு ஏற்படும். ஆனால், அரசு தேவையான மானியங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது.

தற்போது உலகளாவிய தொற்று நிலைமையில் மக்களுக்குத் தேவையான மானியங்களை மக்களுக்கு அரசு வழங்கியுள்ளது. நாங்கள் சாவல்களுடன் மிகவும் வெற்றிகரமாகச் செல்ல முடியுமாக இருக்கின்றது.

சீனா பாரிய ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளது. அதேபோன்று இந்தியா, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவும் ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளன.

இப்போது எதிர்க்கட்சியினர் எந்தளவுக்கு முயற்சிகளை முன்னெடுத்தாலும் அமெரிக்கா போன்ற நாடுகள் எங்களுக்கு ஒத்துழைப்புகளைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றன" - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*



*6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்*
*6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய ராசி பலன்*
*7.15 மணி : கதை வழி அறமொழி*
*வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு*
*7.20 மணி : சித்த மருத்துவம்*
*வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்*
*7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை-நேரலை*
*10.30 மணி : தொடர்நாடகம்*
*11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)*
**பகல்**
*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை*
*1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மகாமுனி,புரியாதபுதிர்*
*திரைப்படங்களின் காட்சிகள்*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார்-*
*சிறுவர் நேரலை நிகழ்ச்சி*



*5.30 மணி : குறுந்திரை நேரம்*
*6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10*
*திரைப்படங்களின் தரவரிசை*
**இரவு**
*7.00 மணி : பாரதீ*



*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : துறைக்கு அப்பால்-AS.நிசாந்தன்*
*தலைவர் யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கம்*



*10.00 மணி : நேருக்கு நேர்*

**காலை**
*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
**பகல்**
*1.00 மணி : நகைச்சுவை மன்னன்*
*கவுண்டமணி செந்தில் நடிப்பில்*
*கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*
**இரவு**
*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

**காலை**
*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*
**பகல்**
*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*
**இரவு**
*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

**காலை**
*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)*
*நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)*
*வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம்*
*(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*
**பகல்**
*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்*
**இரவு**
*7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி*
*வினாத்தாள்*

**காலை**
*5.00 மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*07.00 மணி : இன்றைய சிந்தனை*
*07.05 மணி : இன்றைய நாள்*
*07.30 மணி : மங்கள இசை*
*08.00 மணி : அருளுரை*
*08.30 மணி : திருவாசகம்*
*09.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பாடல்கள்*
*10.30 மணி : பஜனை*
*11.00 மணி : பக்திமலர்*
**பகல்**
*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*
**இரவு**
*7.00 மணி :செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*

**காலை**
*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்*
*09.30 மணி : மன்றாடு*
*10.00 மணி: நாளொரு நற்சிந்தனை*
*(மறு ஒலிபரப்பு)*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபமாலை*
**பகல்**
*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்சிந்தனை*
*03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி :நாளொரு நற்சிந்தனை*
*(மறு ஒலிபரப்பு)*

**காலை**
*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*
**பகல்**
*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஜ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*
**இரவு**
*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*